# தொண்டன்

ஆரம்பம்: 1969–பெப்ரவரி

ஏப்பிரல்- 2008

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



## அரிசி விலை உயர்வு

தேங்காயும், மாங்காயும் இறக்குமதியா?

நிரந்தரப் பிளவா?

அரசாங்கத்தின் சதியா?

இன்பத்திலும்
துன்பத்திலும்
அகதி வாழ்விலும்
பாங்கு கொள்ளும்
மடு மாதா

மாகாணசபை முதல்வர் யார்?

சபாஷ் சரியான போட்டி!

20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஏப்ரல் - 2008

மலர்- 40 இதழ்- 03

**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.

# உள்ளே



| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| எனது நம்பிக்கை... | - | 02 |
| பொது உளச் சார்பு... | - | 03 |
| போர்க்களத்தில் என் செபம்... | - | 04 |
| வெள்ளிவிழா காணும்... | - | 05 |
| புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியல்... | - | 06 |
| இலக்கிய மஞ்சரி... | - | 07 |
| மாணவர் பக்கம்... | - | 08 |
| உங்கள் சுகமான வாழ்வுக்கு.. | - | 09 |
| மதம் மாற உரிமையுண்டு... | - | 10 |
| நம்மை அடிமையாக்கும்... | - | 11 |
| இலங்கைத் தேர்தல்களில்... | - | 13 |
| எங்கே போகிறது இந்த... | - | 14 |
| யாழ் நூல்... | - | 16 |
| எழுத்தாளர் ஜோசப் பாலா... | - | 17 |
| தொண்டனின் சில நிமிடங்கள்... | - | 18 |
| எல்லோரும் உங்களை... | - | 20 |
| போதைவஸ்திடமிருந்து... | - | 21 |
| விசேட தினங்களை... | - | 23 |
| கோபம் ஏன்... | - | 24 |
| பொறுமையின் வலிமை... | - | 26 |
| விவிலியம் கற்போம்... | - | 27 |
| அறிவை வளர்ப்போம்... | - | 28 |

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

விலை : 20/=

ஆண்டு சந்தா : 350/=

(தபாற்செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

வணக்கம்!

எங்க மகாஜனங்களுக்கு எதைப்பற்றி சொல்லப்போறீங்க?

முதல்ல, ஏழை எளிய மக்களின் வயிற்றெரிச்சலைத்தான் சொல்ல வேணும்.

கொஞ்சம் பொறுங்க, வயிற்றெரிச்சலா, வயிற்றுப்பசியா?

அதான்பா, வயிற்றுப்பசியால வந்திருக்கிற அரசாங்கத்துக்கெதிரான வயிற்றெரிச்சலத்தான்.

அப்படியெண்டா நாட்டுமக்கள் அனைவரதும் வயிற்றெரிச்சல் எண்டு அழகாச் சொல்லுறது.

சும்மா போப்பா, வயிற்றெரிச்சல் என்றபிறகு அதுல எப்படி அழகு இருக்கமுடியும், அசிங்கமும் அருவருப்பும்தான் குடிகொண்டிருக்கும்.

அப்படிச் சொல்லுங்க அண்ணாச்சி; அரிசி விலை மலைபோல ஏறியிருக்கு, தேங்காயின்ட விலை உச்சியில இருக்கு.

சரியா சொன்னாயப்பா நீ, எரிபொருள் விலை சர்வதேச சந்தையில கூடியிருக்கு. அதன்ட தாக்கம்தான் இங்க விலை அதிகரிப்புக்கொண்டுவருகுது, ஒத்துக்கலாம். தேங்காயும் மாங்காயுமா இங்க இறக்கமதி செய்யுறாங்க.யாருக்குடா பூச்சாண்டி காட்டுறீங்க.

இருந்தாலும் அண்ணாச்சி, மகாஜனங்களுடைய வயிற்றெரிச்சலுக்கு மத்தியில எவ்வளவு சாதுரியமா ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு பதில சொல்லி காய நகர்த்தித்து இந்த அரசாங்கம். அதுக்கு ஒரு சபாஷ் போட்டுக்கலாம். அங்காலையும் பாடி இங்காலையும் பாடி பொறுத்த தருணத்தில காலவாரும் JVPக்கு இண்டைக்கு நடந்திருக்கின்ற பிளவும் அரசாங்கத்தின் சாதுரியத்தின் விளைவுதாண்டா தம்பி.

அண்ணாச்சி, அப்படியெண்டு சொன்னா 'நம்மை நாமே ஆள்வோம்' என்டு சொல்லிக்கொண்டு வெத்தில சின்னத்தில வோட்டு கேட்கிறது பொருந்தக்கூடியதாக இருக்கா?

அந்தக் கன்றாவிய ஏன்டா கேட்குறா பொடிப்பயலே! தமிழன்ற காதில பூ சுத்தலாம் எண்டு தமிழனே தீர்மானிச்சபிறகு இன்னும் அடிமைகள்தான் என்றது "கிழக்கிற்குக் கிடைச்ச வெளிச்சம்.."ஹி..ஹி..ஹீ..

இந்த வெளிச்சம் நீடிக்குமாண்ணே?

சும்மா என்ட வாய கிளராதடா பொடியா.


அதுவும் சரிதாண்ணே, நீங்க ஆரூடம் சொல்ல அது விவகாரமாப்போக ஏன் இந்த வம்பு. மடுமாதா திருத்தலத்தையே பாதுகாத்துத் தரமுடியாது எண்டு கையை விரிச்சு, அதுக்கு ஏகப்பட்ட சாக்குப் போக்கெல்லாம் சொல்லும்போது நீங்க என்னண்ண நான் என்னண்ண.

இருந்தாலும் தம்பி நல்லா யோசிச்சுப்பார், மடுமாதாத் திருத்தலம் என்றது மிகப் பழமை வாய்ந்த திருத்தலம். சகல இனத்தவர்களும் சென்றுவருவது மாத்திரமல்லாம அகதிகளுக்குத் தஞ்சம் கொடுத்துவந்த அடைக்கலப் பூமி அது. அதனால சம்மந்தப்பட்ட எல்லாரும் இதை உணர்ந்து அந்தப் பிரதேசத்தை சமாதானப் பிரதேசமாக அமைச்சிருக்க வேணும்.

ஆனா பாருங்கண்ணே, மாதா ஒரு செய்திய சொல்லியிருக்கிறா. அதாவது, மக்கள் அகதிகளாக அங்கும் இங்கும் சிதறி ஓடும்போது தான் மாத்திரம் இருந்த இடத்திலேயே இருக்க விரும்பாம அகதிகளோடு அகதிகளாக அல்லல்படும் மக்களோடு அவங்க துன்பத்தில பங்குகொள்ளும் அன்னையென நிரூபித்திருக்கிறாள் எம்தாய் அன்னைமரியாள்.

ஆமாப்பா, அன்னை மரியாள் துன்பத்தில் பங்குகொள்பவள் மாத்திரமல்லாம துயரங்கள், துன்பங்கள் அனைத்திலும் இருந்து விடுவிக்க தன் மகன் இயேசுவிடம் பரிந்து பேசுபவள். அன்னை மரியாள் சமாதானத்தின் இராக்கினி. ஆகவே எம் நாட்டிற்காகப் பரிந்து பேசி சமாதானத்தைப் பெற்றுத்தருவாள் என்று விசுவசிப்போம்.

**– ஆசிரியர்**



## இறைவாக்கு

உலகில் உங்களுக்குத் துன்பமுண்டு.

எனினும் துணிவுடன் இருங்கள்.

(யோவான்: 16:33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நம்பிக்கை

- யாழ் ராதவல்லி -



வானத்தையும் பூமியையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த பரம்பொருளாகிய இறைவனை நம்புகிறேன். அவர் மானிடரைத் தன் சாயலாக உருவாக்கி, வாழும் உரிமை அளித்துள்ளார் எனவும் நம்புகிறேன். பிளவு பட்ட சமூகத்தை ஒன்று பட்ட மனுக்குலமாக மாற்றவும், அநீதியை அழித்து நீதியை நிலை நாட்டவும், பொய்மையை அகற்றி உண்மையைக் கட்டியெழுப்பவும், இருளகற்றி ஒளி ஏற்றவும், மனுவுருவாக அவதரித்தார் இறைமகன் இயேசுபிரான்; அவரையும் நம்புகிறேன். அவர் சமயத்தினதும், அரசியலினதும் அதிகாரத்துவத்தினால் படுகொலை செய்யப்பட்டார் எனவும் நம்புகிறேன். உண்மைக்காகவும் நீதிக்காகவும் உழைப்பவர்களை கல்லறை ஒருபோதும் கட்டிவைக்க முடியாது. இதனால் மரணத்தைக் கடந்து உயிர்த்த இயேசுவையும் நம்புகிறேன்.


அவர் விண்ணுலகிற்குச் சென்று இறைவனின் வலப்புறத்தில் வீற்றிருந்து அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டவர்களை ஆற்றித் தேற்றுகின்றார் எனவும், மனுக்குலத்தினைத் துன்புறுத்துகின்றவர்களை அடித்து நொருக்கி மனம் மாற்றுவார் எனவும் நம்புகிறேன். தூய ஆவி உண்டென்றும் நம்புகிறேன். அவர் இயற்கையைப் பாதுகாக்கின்றார், துன்புறுகின்ற ஒவ்வொரு மானிடரையும் தேற்றுகின்றார், இடம்பெயர்ந்து அல்லலுறுகின்ற மக்களுக்கு அடைக்கலமாகின்றார், சிறுவர் உரிமையைப் பேணுகின்றார், துன்புறுகின்ற பெண்களுக்கு ஆறுதல் கொடுக்கின்றார், காணாமற் போனோரைக் கண்டுபிடிக்கின்றார் எனவும் நம்புகின்றேன். துன்புறுகின்ற மக்களுடன் துன்புறுகின்ற, அநீதிக்கு மௌனித்திருக்காது உரத்துக் குரல் கொடுக்கின்ற ஒரே பரிசுத்தத் திருச்சபையை நம்புகின்றேன்.

- ஆமென் -

## கடுகுக் கதை 3 ஏன் அழுதான்?

ஜேக்கப், தபசுகாலம் வந்தால் நாற்பது நாளும் மதுவைத் தொடவே மாட்டான். உயிர்த்த ஞாயிறு அன்று, அந்த நாற்பது நாள் விட்டதையும் சேர்த்துக் குடித்துத் தள்ளிவிடுவான். பாதர் அலெக்சாண்டருக்கு இது நன்றாகத் தெரியும். இப்பொழுது தபசுகாலம் தொடங்கி முடியும் தருவாயில் உள்ளது. ஜேக்கப்பைத் திருத்த என்ன வழி என்று அலெக்சாண்டர் யோசித்தார். ஜேக்கப்பை வரவழைத்தார்.

"ஜேக்கப் இன்னும் எத்தனை நாளைக்கு நீ குடிக்கமாட்டாய்" "பெரிய சனி முடியும்வரை சுவாமி" "சரி எனக்கு ஒரு உதவி செய்வாயா....?" "ஓம் சுவாமி" "இந்த முறைமட்டும் நான் சொல்ற நாள் வரைக்கும் நீ குடிக்காம இருக்கணும்; கொஞ்ச நாளைக்குத்தான். பிறகு எப்ப பாவிக்கலாம் எண்டு இறை இரக்கத் திருநாளைக்கு அடுத்த திங்கள் சொல்லுவன் அதுவர பொறுத்துக்கொள்ள வேண்டும். சரியா...?" "சத்தியமா... அதுவரைக்கும் குடிக்கமாட்டன்சுவாமி" இறைஇரக்கத் திருநாள் வரைக்கும் ஜேக்கப் ஒருமாதிரியாகச் சமாளித்துவிட்டான். வாயெல்லாம் மசமசத்தது. திங்கள் காலை பங்குமனைக்கு ஓடினான். அங்கு சிலுவையிட்ட பெரிய வெள்ளைக்கொடி பறந்துகொண்டிருந்தது. அங்கு நின்றவர்கள் சொன்னார்கள் "பாதருக்கு இரவு மாரடைப்பு. பெரியாஸ்பத்திரியில அமைதியடைஞ்சித்தாரு" ஜேக்கப், வாழ்க்கையில் முதற்தடவையாக வாய்விட்டழுதான். ஏனென்று அவனுக்குத்தான் தெரியும்.




- பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது உளச்சார்பு என்றால் என்ன?



இன்று பொதுவாக க.பொ.த(உயர்தரப்) பரீட்சைகளிற் கூட பொதுப் பரீட்சையில் ஒரு பகுதியாக இடம் பிடித்துள்ளது. இப்பரீட்சையிலும் குறிப்பிட்ட புள்ளிகளை மாணவர்கள் பெறாத பட்சத்தில் பல்கழைக்கழகத்திற்கு கூட செல்ல முடியாது. S.L.A.S , S.L.E.A.S போன்ற உயர் பதவிகளுக்கான பரீட்சைகளில் ஒரு வினாத் தாளாக 'I.Q' (Intelligence quotients) முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது குறிப்பிடத் தக்கதே.

இன்று உலகமெங்கும் மனிதனது உள ஆற்றலை (Mental ability) அளவிட உதவும் கலையாக 'I.Q' பரிணமித்துள்ளது. இதனை 'விவேக ஈவு' என்றும் 'அறிவுத்திற அளவு' என்றும் 'நுண்மதி ஈவு' என்றும் தமிழில் அழைப்பார்கள்.

உண்மையில் ஒருவரது உள ஆற்றலை மதிப்பிட உதவும் ஓர் எண் மதிப்பீடே இதுவாகும். இம்மதிப்பீடு ஆண்டு 5ல் கூட நடாத்தப்படுகிறது. ஆச்சரியமாக உள்ளதா? உள ஆற்றலை எண்ணால் கணிக்க முடியுமா? ஆம். அதிற் சிறிதளவு சந்தேகமும் கிடையாது. இம்முறையை அறிமுகப்படுத்தியவரின் பெயர்-**அல்பிறெட் பீனேற்** (Alfred Binet) இவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். இவர் 1904 ஆம் ஆண்டு மாணவர்கள் சிலரின் உளவாற்றலை இவ்வாறான பரீட்சை ஒன்றால் தயாரித்தார். அப்பரீட்சையில் 30வினாக்கள் கொடுக்கப்பட்டதுடன் அவை மதிப்பிடல், கிரகித்தல், காரணங்காணல் எனும் அம்சங்களை உள்வாங்கி இருந்தது. அல்பிறெட் பீனேற் இப்பரீட்சையை வயதடிப்படையில் தயாரித்தார்.

இப்பரீட்சையில் ஏழுவயது மாணவன், எட்டு வயதிற்குரிய மாணவனின் பரீட்சையில் சித்தி அடைந்தால் அவனது உள வயது எட்டாகும். அதே போன்று ஒன்பது வயது மாணவன் ஒருவன் எட்டு வயது மாணவனுக்குரிய பரீட்சையில் தோல்வி அடைந்தால் அவனது உள வயது எட்டாகும். இந்த அறிவுத்திற அளவெண் 'உள வயது' (Mentalage) என்று வகுத்தார்.

இருபது வயது இளைஞன் ஒருவன் இருபது வயதிற்குரிய பரீட்சையில் தோல்வி கண்டு அவன் ஒன்பது வயதிற்குரிய பரீட்சையில் சித்தி பெறுவானாகில் அவனது உள வயது ஒன்பதுதான். இதுபற்றி அல்பிறெட் பீனேற் ஒரு நூலையே வெளியிட்டிருந்தார். பின்பு லூயிஸ் றேமன் (Louies reymon) விரிவு படுத்தி சீர்செய்தார். இவர்களைத் தொடர்ந்து பேராசிரியர் ஸ்பியர்மன் (Sperman), வோனன் (vernon), டெம்ஸ்டர் (Dempster), வைஸ்மன் (Wiseman) ஆகியோர் ஆழமாக ஆராய்ந்து அறிவுத்திற அளவெண்ணைக் கணிக்கும் சூத்திரத்தை உருவாக்கினார்கள்.

இவ்வளவுச் சட்டங்களில் முதன்மையானது ஸ்ரான்போர்ட் பீனேற் நுன்மதி ஈவுச்சட்டம். 1916இல் ஸ்ரான்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எல்-எம்-ரேமன் கீழ்வரும் நுண்ஈவுச் சூத்திரத்தை வகுத்தார். இதுவே ஸ்ரான்போர்ட் பீனேற் அளவுச்சட்டம் எனப்படுகிறது.

$$\text{I.Q} = \frac{\text{Mental Age}}{\text{Chronotogical Age}} \times 100$$

$$\text{நுண்மதி ஈவு} = \frac{\text{உளவயது}}{\text{காலவயது (மெய்வயது)}} \times 100$$

6 வயது மாணவன் 8 வயதிற்குரிய நுண்ணறிவுப் பரீட்சையில் சித்தியானால், அவனது I.Q

$$\text{I.Q} = \frac{8 \text{ உளவயது}}{6 \text{ மெய்வயது}} \times 100 = \frac{400}{3} = 133.3$$

சாதாரண விவேகியின் 'I.Q' 100 ஆகும். அதற்குக் கூடுதலாகும் போது அவன் விவேகியாகிறான். 100 மாணவர்களை பரீட்சார்த்தமாக எடுக்கப்பட்ட அளவு வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1%...... 141க்கு மேல் - மேதைகள்
3%...... 131-140 - சிறந்த விவேகிகள்
25%..... 111-130 - நல்ல விவேகிகள்
42%..... 91-110 - விவேகிகள்
20%..... 71-90 - விவேகம் குறைந்தோர்
4%...... 51-70 - விவேகம் குறைந்தோர்
5%...... 50-கீழ் - விவேகம் அற்றோர்

இப்பரீட்சை ஒரு மணிநேரப் பரீட்சையே. உயர் பதவி வேண்டுமானால் I.Q (நுண்மதி ஈவு) பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற முயலுங்கள்.

**இதோ உங்கள் நுண்ணறிவிற்கு ஒரு வினா.**

மோகன் தனது மனைவியிலும் 11 வயது மூத்தவன். சீதா தனது மகனின் வயதிலும் 11மடங்கு முத்தவள். 5வருடங்களின் பின்பு மகனின் வயது 9 ஆக இருக்கும் போது மோகனின் தற்போதைய வயது என்ன?

விடை 5ம் பக்கத்தில்...

– வயலற் சந்திரசேகரம் –

# போர்க்களத்தில் என் ஜெபம் கேட்டு

(10)

சா[ஜ]ஹரான்

ஆவியோடு வாழு ஆனந்தமாய்ப் பாடு
ஆராதித்துப் புகழ்ந்து ஆடிப்பாடி மகிழு
கைகொட்டித்துதித்து ஆண்டவனை வணங்கி
மகிழ்ந்திடு வாழ்வினில் என்றுமே உயர்ந்திடு

வாஞ்சையோடு வசப்படு வாயார வாழ்த்திடு
மண்ணுலகை மறந்திடு விண்ணுலகை நினைத்திடு
விருப்புடனே விசுவசி விண்ணரசை சுவீகரி
களிப்புடனே ஆர்ப்பரி கனிவுடனே தாபரி
கைகொட்டித்துதித்து ஆண்டவனை வணங்கி
மகிழ்ந்திடு வாழ்வினில் என்றுமே உயர்ந்திடு

அன்பை வார் இறைத்திடு ஆறுதலைக் கொடுத்திடு
இரக்கத்தையே இறைஞ்சிடு இன்முகத்தைக் காட்டிடு
வார்த்தையை வாசிப்போம் வல்லமையை ஆசிப்போம்
பொறுப்புடனே யோசிப்போம் கொல்லாமையை நேசிப்போம்
கைகொட்டித்துதித்து ஆண்டவனை வணங்கி
மகிழ்ந்திடு வாழ்வினில் என்றுமே உயர்ந்திடு

படையெடுத்துப் புறப்படு படைத்தவனை சாற்றிடு
பணிவுடனே கீழ்ப்படிந்து பண்புடனே இருந்திடு
கஷ்டப்பட்டு உழைத்திடு கவலையைத்தான் போக்கிடு
பகைவரை மன்னித்திடு பண்புடனே வாழ்ந்திடு
கைகொட்டித்துதித்து ஆண்டவனை வணங்கி
மகிழ்ந்திடு வாழ்வினில் என்றுமே உயர்ந்திடு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழாக் காணும் அருள்தந்தையர்

முன்னாள் தொண்டன் ஆசிரியரும் சமூகத் தொடர்பு நிலைய இயக்குனரும் தற்போது திருகோணமலை மறைக்கோட்ட குரு முதல்வரும், உவர்மலைப் பங்குத் தந்தையுமான அருள்தந்தை கிங்ஸ்லி றொபட் அவர்கள் இம்மாதம் (ஏப்ரல்) 28ம் திகதி தமது குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளிவிழாக் காண்கின்றார்.



திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பல பங்குகளிலும் பணியாற்றியுள்ளதோடு, பொறுப்புள்ள பதவிகள் பலவும் வகித்து அரும் பணி யாற்றியுள்ள அடிளார் பல்லாண்டு வாழ்ந்து, பணிவாழ்வில் சிறக்க, அருள்பணிக்கு அழைத்த அன்பான இறைவன் தம் ஆசீரால் நிறைத்து வழிநடத்த வேண்டுமென்று இறைஞ்சுகின்றோம், வாழ்த்துகிறோம்.



திருகோணமலை சின்னக்கடைப் பங்கைச் சேர்ந்தவரும் தற்போது மட்டக்களப்பு நாவற்குடா பங்குத் தந்தையுமான அருள்தந்தை B. A. யோசப் அவர்களும் இம்மாதம் (ஏப்ரல்) 28ம் திகதி தமது குருத்துவப் பணிவாழ்வில் வெள்ளிவிழாக் காண்கின்றார்.

மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் பணியாற்றி தலத்திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களித்த அடிகளார், திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. பணிவாழ்வில் வெள்ளிவிழாக் காணும் அடிகளாரை வாழ்த்துவதோடு இதுவரை காலமும் வழிநடத்திய அன்பான இறைவன் வருங்காலங்களிலும் இறையாட்சிப் பணியில் இடையறாது உழைத்திட அருளீந்து காத்திட வேண்டுமென நன்றிகூறிச் செபிக்கிறோம்.

**விடை :**

| | | |
|---|---|---|
| மகளது தற்போதைய வயது | = 9-5 | = 4 |
| தாய் 11 மடங்கு மூத்தவர் | = 4x11 | = 44 |
| மோகன் 11 வயது மூத்தவர் | = 44+11 | = 55 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியலும், இன்றைய தமிழர் சமூகமும்

அலகு - 2

ம. குமுதா (சிறப்புக் கலைமாணி)

## நிருபங்களில் வியாபித்து நிற்கும் ஒழுக்க விழுமியங்கள்.



### 1. சட்டம் பற்றிய பவுலின் பார்வை.

புனித பவுல் முதன்மையாக இயேசுவின் சிலுவையின் கண்ணோட்டத்திலேயே சட்டத்தைப் பார்க்கின்றார். அவருக்கு சட்டத்தை நிறைவுசெய்வது மட்டுமல்ல சிலுவையில் அறையுண்ட இயேசுவுடனான ஒன்றிப்பே முக்கியமாகப்பட்டது. இதனால் பவுல் "சட்டத்தின் மூலம் நாங்கள் இறைவனுக்கு ஏற்புடையவராக மாறலாம் என்றால் இயேசு இறந்தது வீண்" (கலாத்தியர் 2:21) எனக் கூறுகின்றார்.


"திருச்சட்டம் நல்லது" (1 தீமோத்தேயு 1:8, உரோமையர் 7:12) என்கிறார் புனித பவுல். உண்மையில் சட்டம் எப்போதும் நல்லதும் இறைவனின் சித்தத்திற்கேற்ப அருளப்பட்டதுமாகும். சட்டம் என்பது கடைப்பிடிக்கப்படவேண்டியது, நிறைவேற்றப்படவேண்டியது. சட்டத்தினை நிறை வேற்ற மறுப்பவன் கடவுளுக்கு எதிரானவனாகின்றான். "திருச்சட்டத்தைக் கேட்பதால் மட்டும் யாரும் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவதில்லை, அதனைக் கடைப்பிடிப்பவர்களே அவருக்கு ஏற்புடையவர் ஆவார்கள்" (உரோமையர் 2:13) என்கிறார் பவுல்.

எல்லாருடைய உள்ளங்களிலும் கடவுளின் சட்டம் எழுதப்பட்டிருந்தாலும் முதற்பெற்றோர் ஆதாம் செய்த பாவத்தினாலும், மக்களனைவரும் செய்த பாவத்தினாலும் நாம் இறைவனிடமிருந்து விலகியே இருந்தோம். "பாவத்திலிருந்து காப்பாற்றவேண்டிய சட்டம், பாவம் உலகில் பெருக உதவியது" (உரோமையர் 5:20) ஆனால், வலுவற்ற சட்டங்களால் செய்யமுடியாத ஒன்றைக் கடவுள் செய்தார். அதுவே "தம் ஒரே பேறான மகனை இவ்வுலகிற்கு அனுப்பி அவர் மூலமாக பாவத்திற்கு ஒரு முடிவு கட்டினார்" (உரோமையர் 8:3) இவ்வாறு புனித பவுல் சட்டத்தால் பாவம் நுழைந்த தன்மையையும் கிறிஸ்து அதனை வென்றதையும் வலியுறுத்தி நிற்கின்றார்.

மீட்பின் நம்பிக்கை உண்மையில் உதயமாவது சிலுவையில்தான். எனவே "நம்பிக்கையின் அடிப்படையில் நாம் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆக்கப்படுவதற்கு நம்மைக் கிறிஸ்துவிடம் கூட்டிச்செல்லும் வழித்துணையாகத் திருச்சட்டம் செயற்படுகின்றது" (கலாத்தியர் 3:24)

கிறிஸ்துதான் திருச்சட்டத்தின் நிறைவு. எனவேதான் புனித பவுல் இவ்வாறு கூறுகின்றார். "இறைமகன் இயேசு வந்தது தேவையற்ற பழைய சட்டதிட்டங்களை விடுத்து நிறைவான அருள் வாழ்வை மானிடருக்குப் பெற்றுத்தரவே". இயேசுவின் திருச்சட்டம் "அன்பே". எனவே கிறிஸ்துவுடன் ஒன்றிப்பதால் சட்டத்தின்முன் நாம் இறந்தவர்களானாலும் உயிர்ப்பிக்கப்பட்டு கிறிஸ்துவோடு இணைக்கப்படுகின்றோம். இவை சட்டம் பற்றி பவுல் கொண்டிருந்த கருத்துகளில் சிலவாகும்.

- தொடரும் -



## குறும்(புப்)பா - 3

நாடெல்லாம் தேர்தல்தான் பேச்சு
நாமெல்லாம் வாயில்லாப் பூச்சி
ஓடாகத் தேய்ந்தாலும் உயிர்வீடு சேர்ந்தாலும்
போடய்யா விரல்மீது பூச்சு

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

இக்கால இளைஞர்கள் அதிகம்பேரை வாசிக்கத் தூண்டியவர் சுஜாதா என்றால், அக்கருத்துக்கு எதிர்ப்பு எதுவும் இருக்காது. எஸ். ரங்கராஜன் என்ற இயற்பெயர் கொண்ட சுஜாதா அவர்கள் தனது மனைவியின் பெயரிலேயே எழுதி வந்தார்கள். சிறுகதை, நாவல், கவிதை, திரைக்கதை என்று எல்லாவற்றையும் தொட்டு விட்டவர். இலத்திரனியல் பொறியியலாளரான இவர், கணினித் துறையில் ஜாம்பவான்.

இவர் ஜூனியர் விகடனில் எழுதிய "ஏன், எதற்கு, எப்படி?" என்று வாசகர்கள் கேட்கும் அறிவியல் சம்மந்தப்பட்ட கேள்விகட்கான பதில்கள் மிகவும் பிரபல்யமானவை. அதில் கணினி பற்றியும் சொல்லியுள்ளார்;. காதல் பற்றியும் எழுதியுள்ளார்; உளவியல் பற்றியும் விளக்கியுள்ளார்; களவியல் பற்றியும் கூறியுள்ளார்; ஆழ்வார்கள் பற்றியும் எழுதியுள்ளார்; ஆழ்கடல் பற்றியும் விளக்கியுள்ளார்.

நிறைய வாசிக்கும் பழக்கமுள்ளவர். அவர் ஒரு முறை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் "கேள்விகளுக்குப் பதில் அளிப்பதில் இதற்கு முன்பும் இப்போதும் ஒரு சிறிய வேறுபாடு. முன்பெல்லாம் புத்தகங்களைத் தேடிப்பிடித்து படித்து பதில் எழுதவேண்டியிருந்தது. இப்போது இன்டர்நெற் என்னும் மகத்தான உலகளாவிய ஒரு நூலகம் உள்ளது. அதில் தகவல்களும், புள்ளிவிபரங்களும், புகைப்படங்களும், சித்திரங்களும் கொட்டிக்கிடக்கின்றன.

இன்டர்நெற் கங்கை நதிபோல, பூவும் மிதக்கும், புழுவும் மிதக்கும். முழுக்க முழுக்க மூடக்கருத்துகளிலிருந்து மிகச் சிறந்த அறிஞர்களின் கருத்துரை எல்லாம் கலந்து கிடக்கும். அக்கருத்துகளை அலசி, பகுத்தறிவுத் தராசில் வைத்துப் பார்த்துத் தெரிந்து எடுக்கவேண்டும்.

சுஜாதாவின் துப்பறியும் நாவல்களில் கணேஷ், வசந்த் என்ற இரண்டு பாத்திரங்கள் வரும். கணேஷ் என்பவர் சிரேஷ்ட வழக்கறிஞர்; வசந்த் அவரிடம் பணியாற்றும் கனிஷ்ட வழக்கறிஞர். வசந்த் துடிப்பான இளைஞன். துப்பறிவதில் கணேசுக்கு உதவுபவன். எங்கு நுழைந்தும் தகவல்களைச்



சேகரிப்பதில் கெட்டிக்காரன். இரட்டை வசன ஜோக்குகள் சொல்வதில் கில்லாடி. அவன் சொல்லும் சில ஜோக்குகளை தொண்டனில் எழுதமுடியாது.

சில ஜோக்குகளை தமிழ்ப் பத்திரிகைகளில் எழுத முடியாத நிலை இன்னமும் உள்ளது என்று சுஜாதாவே சொல்லியுள்ளார். குறிப்பாக 'மெக்ஸிக்கோ சலவைக்காரி' ஜோக். அவர் இறக்கும்வரை அவர் அதைப்பற்றி எழுதவேயில்லை. பெண்கள்மீது சித்தர்களுக்கு அப்படியென்ன கோபம்? இல்லை பெண்களை வெறுத்தால்தான் சித்தர்களாக முடியுமா? என்றவொரு கேள்விக்கு சுஜாதா அவர்கள் பின்வருமாறு பதில் கூறுகின்றார்.

பெரும்பாலான சித்தர்கள், சித்தர்களாவதற்குப் பெண்கள்தான் காரணமாக இருக்கும். வள்ளுவன் காலத்திலேயே 'பிறன் இல் விழையாமை' என்ற அதிகாரம் தேவைப்பட்டிருக்கின்றது. பெண்களை ஒருபுறம் தெய்வங்களாகவும் மறுபுறம் போகப் பொருளாகவும் மதித்த விநோதமான சமுதாயத்தில் எல்லா இயலாமைகளுக்கும் குறை கூற ஒரு பெண் தேவைப்பட்டிருக்கிறாள். மேலும் பெண்கள் இருபது வருசமாகத்தானே கவிதை எழுதத் தொடங்கியுள்ளார்கள். ஆண்டாள், காரைக்கால் அம்மையார் போல் தீப்பொறி பறக்கும் பெண்கவிஞர்கள் மறுபடி தலை நிமிர்ந்து கொண்டிருக்கின்றார்கள். காத்திருங்கள், ஆண்களை வெறுக்கும் பெண் சித்தர்களும் விரைவில் வருவார்கள்.

உண்மையில் சுஜாதாவின் இழப்பு பெரிய வெற்றிடம்தான். இவரின் மறைவை அடுத்து ஏற்பட்ட 'ஸ்டெல்லா புரூஸ்' அவர்களின் மறைவும் அதிர்ச்சியானதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிறிஸ்துவின் தாழ்ச்சியும் மேன்மையும்

மனித வாழ்விலே தாழ்ச்சி என்பது என்னவென்றும், அதனை எவ்விதம் ஒரு மனிதன் வாழ்வில் வெளிக்காட்டவேண்டும் என்றும் மிக அழகாகக் காட்டியுள்ளார் நமதாண்டவர் இயேசுக்கிறிஸ்து. அவர் தனது பிறப்பு முதற்கொண்டு தன் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், மரணம் வரையிலுமே இதற்கு முன்னுதாரணமாய் விளங்கியுள்ளார். தன் இராவுணவு வேளையில் இதன் உச்சக்கட்ட நிலையினைக் காட்டியுள்ளார். நாம் மற்றவர் மட்டில் எவ்விதம் நம்மை மறந்து மற்றவரை மேன்மையாய் மதிக்கவேண்டும் என்பதினை சீடரின் பாதங்களைக் கழுவி தாழ்வுக்கு முன்னுதாரணமாய் விளங்கினார்.

மேலும் இத்தாழ்ச்சி பற்றி பிலிப்பியர் 2:5-11இல் பவுல் குறிப்பிடுகையில், இயேசுக்கிறிஸ்து கொண்டிருந்த மனநிலையே எம்மிலும் விளங்க வேண்டும் எனக் கூறுகிறார். அவர், தான் இறைமகன் என்பதை விட்டு விட்டு, சாதாரண ஒரு மனிதனாகத் தன்னை மாற்றிக்கொண்டார். "கடவுள் தன்மையில் விளங்கிய அவர் அதனை வலிந்து பிடித்துக்கொள்ளும் ஒன்றாய்க் கருதவில்லை". ஒரு மனிதனைப் போல் தமமையே வெறுமையாக்கி அடிமையின் கோலம் பூண்டு, மனித உருவில் தோன்றியதும் அல்லாமல் சாவையே ஏற்கும் அளவிற்கு, அதுவும் அவமானத்தின் சின்னமாய் அனைவராலும் கருதப்படும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு பிதாவிற்குக் கீழ்ப்படிந்து தம்மைத் தாழ்த்திக் கொண்டார். இத்தகைய கீழ்ப்படிவினாலேயே தந்தை அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்குப் பரிசாக வழங்கினார். இதனால் நமதாண்டவர் இயேசுவின் பெயருக்குக் கீழுலகோர், மேலுலகோர், விண்ணவர், மண்ணவர் அனைவருமே பணிகின்றனர். எல்லா நாவுமே இயேசுவே ஆண்டவர் எனக் கூறும் அளவிற்கு அவர் மேன்மைப்படுத்தப்பட்டுள்ளார். அவருடைய தாழ்ச்சியே இத்தகைய மேன்மையினை அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. தந்தையும் இத்தகைய மேன்மை மிகு பரிசினை அவருக்கு வழங்கினார்.

எனவே இம்மேன்மை பற்றி கொலோ 1:15-20ல் பவுல் குறிப்பிடுகையில், இது கட்புலனாகா கடவுளது சாயலெனக் கூறுகின்றார். இது படைப்பனைத்திலும் தலைப்பேறு என்று உயர்வாகக் குறிப்பிடுகின்றார். ஏனெனில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர். அனைத்தும் அவர் வழியாய் அவருக்காய்ப் படைக்கப்பட்டன. எனவே எல்லா வற்றிற்கும் மேலானவரும் அவரே; அனைத்திற்கும் முந்தியவரும் அவரே. அனைத்தும் அவரோடிணைந்து நிலை பெறுகின்றன எனக் கூறப்படுகிறது. திருச் சபையாகிய உடலுக்குத் தலையும் தொடக்கமும் அவரே. எனவேதான் இறந்தோரிலிருந்து முதலில் அவர் உயிர்த்தெழுந்தார். தன் முழு நிறைவும் அவரிலேயே நிறைவுபெற வேண்டுமெனத் தந்தை திருவுளம் கொண்டார். இதனாலேயே அவரை மேன்மைப்படுத்தினார். தம் மகனின் சிலுவைச் சாவினால் அமைதியை நிலைநாட்டவும், விண்ணி லுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் தம்முடன் ஒப்புரவாக்கவும் திருவுளம் கொண்டார். எனவே அவர் சிந்திய இரத்தம் நமக்கு அருள் வாழ்வினைப் பெற்றுத்தந்தது. அவரது தாழ்ச்சி நமக்கு முன் உதாரணமாய் விளங்கியது. எனவே கிறிஸ்துவின் தாழ்ச்சி பற்றியும் அதனால் அவர் பெற்ற மேன்மை பற்றியும் மிக அழகாய்க் குறிப்பிடும் பவுல், இத்கைய மன நிலையே நம்மிலும் விளங்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். எனவே இத்தாழ்ச்சி மூலம் நாமும் இறை மேன்மையினைப் பெற்று வாழ முயற்சிக்க வேண்டும். கிறிஸ்து கொண்டுள்ள மனநிலையே எம்மிலும் விளங்கச் செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## வஜ்ராசனம்



1. அமைதியான ஓர் இடத்தைத் தெரிவு செய்து அமரவும்.
2. விரிப்பின் மீது இரு கால்களையும் நீட்டி அமரவும்.
3. கைகளின் உதவியுடன் வலது காலைப் பின்புறம் மடித்து படத்தில் காட்டியவாறு முழுங்கால் முட்டிகளை ஒன்று சேர்க்கவும்.
4. இடது காலையும் பின்புறம் மடித்துப் படத்தில் காட்டியவாறு முழங்கால் முட்டிகளை ஒன்று சேர்க்கவும்.
5. கால் பெரு விரல்களை ஒன்று சேர்த்து குதிக்கால்களை நன்கு விரித்து அதன் இடையில் பின்புறத்தை வைத்து அமரவும்.
6. முதுகுத்தண்டு வளையாத விதத்தில் நேராக அமர வேண்டும்.
7. உள்ளங்கைகளை முழங்கால் முட்டியின் மீது வைத்து கைகளை நேராக்கவும்.
8. பார்வை நேராக இருக்க வேண்டும். ஆசன நிலையில் இயல்பான மூச்சில் இருக்க வேண்டும்.
9. 10 வினாடிகள் முதல் 10 நிமிடங்கள் வரை செய்யலாம்.
10. பின்னர் கால்களை நீட்டி இயல்பு நிலைக்கு வந்து ஓய்வு எடுக்கவும்.

### இதனால் ஏற்படும் பலன்கள்

1. வாழ்க்கையில் வெற்றிபெற சாதிக்கவேண்டும் என்ற திடமான முடிவு எடுக்க இவ்வாசனம் உதவுகிறது.
2. கோபத்தை நீக்கி நிம்மதியைத் தருகின்றது.
3. இளமை மேம்படும்.
4. மூளைக்கு இரத்த ஓட்டத்தைக் கொண்டு செல்லும் வேகம் அதிகரிக்கின்றது.
5. மனக்கவலைகளை விட்டு வெற்றிபெற இவ்வாசனம் உதவுகின்றது.

### மாணவர்களுக்கு ஏற்படும் நன்மைகள்

1. படிக்கும்போது ஏற்படும் சோர்வு, சகிப்புத் தன்மை, அலையும் மனம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றது.
2. தெளிவான சிந்தனை பெறுவார்கள்.
3. தயக்கம், கோழைத்தனம், அச்சம், பயம் உள்ள மாணவர்களைச் செம்மைப் படுத்துகின்றது.
4. மாணவர்கள் தியானம் செய்ய இவ்வாசனம் பயனுள்ளதாக அமைகின்றது.
5. எதிர்கால வாழ்வின் சிக்கல்களைத் தீர்க்கும் வழிகள் புலப்படும்.

### தீரும் நோய்கள்

1. முதுகுவலி, இடுப்பு நரம்புவலி குறையும்.
2. கால் முட்டிவலி குறையும்.
3. தலைவலியைப் போக்குகின்றது.
4. இருதயப் படபடப்பு, நடுக்கம் என்பன மறையும்.
5. வாயுக்கோளாறுகளை சரிசெய்கின்றது.
6. உடலின் அழிந்த திசுக்கள் புதுப்பிக்கப் படுவதால் பக்கவாத நோய் அண்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்று ஆசனங்கள்

1. உட்கட்டாசனம்
2. பாதாங்குஸ்தாசனம்

## குறிப்புகள்

1. தியானம் செய்ய உகந்த ஆசனம்.
2. மூட்டுவலி உள்ளவர்கள் இவ்வாசனத்தைத் தவிர்க்கவும்.
3. தரையை ஒட்டிய குதிக்காலின் கீழ் பகுதியில் வலி ஏற்பட்டால் விரிப்பை மடித்து வைத்து அதன் மீது அமர்ந்து செய்யலாம்.
4. கருவுற்ற பெண்கள் ஆசிரியரின் ஆலோசனையைப் பெற்று செய்யவும்.
5. மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar
(India)


# மதம் மாற உரிமையுண்டு

ஒவ்வொருவரும் தங்களது விசுவாசத்தைப் பொதுப் படையாகக் கடைப்பிடிப் பதற்கும் அவர்கள் விரும்பினால் பிற மதங்களுக்கு மாறுவதற்கும் உரிமை உள்ளது என்று திருத் தந்தை 16ம் பெனடிக்ற் கூறியுள்ளார்.

அரபுநாடுகளின் இலத் தீன் ரீதி ஆயர்கள் பேரவையின் உறுப்பினர்களைத் திருப் பீடத்தில் சந்தித்து உரை யாற்றிய திருத்தந்தை, அரபு உலகிலுள்ள பழம் பெருமை மிக்க பிற மதங்களுடன், குறிப்பாக முஸ்லீம்கள், மற்றும் யூதர்களுடன் உரையாடல் அவசியம் என்றும் மனித மாண்பு, சம உரிமைகள், பொறுப்புகள், தேவையில் இருப்போர் மீது அக்கறை ஆகியவை குறித்த ஆயர்களின் பங்கையும் அவர் சுட்டிக் காட்டினார்.

# ஏழைகளுக்கு தர்மம் கொடுங்கள்

## – திருத்தந்தை




கிறீஸ்து உங்களுக்காக ஏழையானார் - என்ற தலைப்பில் தவக்காலத் தையொட்டி கடந்த பெப்ரவரி 6ம் திகதி திருத்தந்தை வெளியிட்ட செய்தியில், உலகப் பொருட்கள் மீது மட்டுக்கு மீறிய அன்பு செலுத்தாமல் ஏழைகளுக்கு தர்மம் கொடுக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், அச்செய்தியில் கிறீஸ்தவர்கள் கடவுளது மகிமைக்காக மட்டுமே தர்மம் செய்யும் எண்ணத்தைக் கொண்டிருக்க வேண்டும். இக்காலம் மீண்டும் கடவுளின் இரக்கத்தினைக் கண்டுணர நம்மைத் தூண்டுகிறது. நாம் கொண்டுள்ள பொருட்களுக்கு நாம் சொந்தக்காரர்கள் அல்ல. மாறாக அவற்றை நிர்வகிப்பவர்கள் என்பதையும் அச்செய்தியில் நினைவுபடுத்தியுள்ளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொலைக்காட்சி நம் வாழ்வில் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாகிவிட்டது. தொலைக்காட்சி பார்ப்பதில்லை எனச் சொல்லும் மனிதர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், நெடுந்தொடர்கள் போன்றவற்றைப் பார்க்காதவர்கள் கூட தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்த்து மகிழ்வார்கள். மிகப் பெரும்பான்மையானோரின் மிக முக்கிய பொழுதுபோக்கே தொலைக்காட்சி பார்ப்பதுதான். ஒரு வகையில் பார்ப்போமானால் நாம் தொலைக்காட்சி யுகத்தில் வாழ்ந்து வருகின்றோம்.

ஒரு வீட்டில் தொலைக்காட்சிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பாருங்கள். வீட்டின் மையமான இடத்தில் அது அமர்ந்திருக்கும். அதைச் சுற்றித்தான் பிற இருக்கைகள் போடப்பட்டிருக்கும். அறையில் இருக்கும் எல்லா இருக்கைகளுமே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நாம் உடனடியாகத் தெளிவாகப் பார்க்கும் விதத்தில் அமைந்திருக்கும்.

தொலைக்காட்சிப் பெட்டியோடு உடன் வருவது அதன் ரிமோட் கன்ட்ரோல். இது யாரிடம் இருக்கவேண்டும் என்பதில் போட்டா போட்டி. குறிப்பாக சிறுவர் சிறுமியர் இருக்கும் வீட்டில் தினமும் ரிமோட்டுக்காகக் கடும் சண்டை நடப்பதைப் பார்க்கலாம். பல்வேறு ஆய்வுகள் நமக்குத் தெரிவிக்கும் தகவல் என்னவென்றால் அதிகாரம் யாரிடம் இருக்கிறதோ அவரே ரிமோட்டை உபயோகிக்கின்றார் என்பதுதான் அது. பொதுவாக ஆண்கள், ஆண் குழந்தைகள் ரிமோட்டை உபயோகிக்கின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. மெகா தொடர்கள் போன்ற பெண்கள் நிகழ்ச்சிகளின் போது அது பெண்களின் கைகளுக்குச் செல்கிறது. ரிமோட் என்பது சிறு கருவிதான் என்றாலும் யார் எந்த அலைவரிசையை எவ்வளவு நேரம் பார்ப்பது என்பதைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

பல வீடுகளில் குறிப்பிட்ட நேரங்களில் தொலைக்காட்சியைப் போட்டு விடுகிறார்கள். நேரடியாக அதன் முன் அமர்ந்து பார்க்கிறார்களோ இல்லையோ அது பாட்டுக்கு அது ஓடிக்கொண்டிருக்கும். படிப்பவர்கள் படித்துக்கொண்டும் பிறவேலைகளில் ஈடுபடுபவர்கள் அதைச் செய்துகொண்டும் இருப்பார்கள். அவ்வப்போது தொலைக்காட்சியில் முதன்மைக் கவனம் செலுத்துவார்கள். பிற நேரங்களில் அது பின்னணி இசையாக இயங்கிக்கொண்டிருக்கும்.

# நம்மை அடிமையாக்கும் தொலைக்காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக விடு முறை தினங்களிலும், பண்டிகை நாட்களிலும் காலையிலிருந்தே தொலைக்காட்சி ஓடிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

தொலைக்காட்சிப் பெட்டியுடன் நாம் செலவிடும் நேரம் மிகவும் முக்கியமான ஒன்று. அதுதான் நாம் தொலைக்காட்சிப் பெட்டியை இயக்குகிறோமா அல்லது அது நம்மை இயக்குகிறதா என்பதைத் தீர்மானிக்கிறது. தொலைக்காட்சியுடன் அதிகமான நேரத்தைச் செலவிடும் மனிதர்கள், குடும்பங்கள் நாளடைவில் தங்களை அறியாமலே அதற்கு அடிமையாகி விடுகின்றனர். அதன் பின் அவர்களால் தொலைக்காட்சி இன்றி இருக்க முடிவதில்லை. தொலைக்காட்சி அவர்களை இயக்கத் தொடங்கி விடுகிறது. அவர்கள் எங்கு சென்றாலும் தொலைக்காட்சியின் துணை தேவைப்பட ஆரம்பிக்கிறது. பிறகு தொலைக்காட்சி இல்லாத இடங்களுக்குப் போவதைத் தவிர்க்கத் தொடங்கிவிடுகிறார்கள். ஒரு தொடரை அல்லது ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து பார்ப்பது என்று ஆரம்பித்து கடைசியில் தொலைக்காட்சியைத் தவறாமல் பார்ப்பது என்பதில் போய் முடிகிறது என்கின்றனர் ஆய்வாளர்.

பெரும்பாலானவர்கள் தொலைக்காட்சியைப் பார்க்கிறார்களே தவிர தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில்லை. அதாவது தொலைக்காட்சியில் எதையாவது பார்த்தாக வேண்டும் என்கின்ற நிர்ப்பந்த நிலைக்கு மனதளவில் தள்ளப்பட்டுவிடுகின்றனர். அவர்களால் சும்மா இருப்பதால் இந்த அடிமைத் தனத்தை நாம் உணர்வதும் இல்லை கண்டுகொள்வதும் இல்லை. பரீட்சை நேரம் போன்ற சில குறிப்பிட்ட தருணங்களைத் தவிர தொலைக்காட்சியைப் பார்ப்பது பெரிய குற்றமாகக் கருதப்படுவதில்லை. ஆனால் இதன் விளைவுகள் என்ன?

மிகவும் மோசமான விளைவு என்னவென்றால் நமது செயல்களைத் தொலைக்காட்சி தீர்மானிக்கும் நிலை ஏற்படுகின்றது. நல்ல நிகழ்ச்சி, நமக்குப் பிடித்தமான நிகழ்ச்சி என்றால் அதைப் பார்ப்பதற்கு நாம் நமது பிற செயற்பாடுகளை மாற்றியமைத்துக் கொள்கின்றோம். பாடங்களை முன்பே படித்துவிடுகின்றோம். அல்லது நிகழ்ச்சிக்குப் பிறகு படிக்கின்றோம். நல்ல நிகழ்ச்சி என்றால் அன்று வெளியே போகவேண்டிய நமது வேலைகளைக் கூட நிறுத்திவிடுகின்றோம்.

தொலைக்காட்சி நமது சமூக உறவுகளைப் பாதிக்கின்றது. ஆரம்பநாட்களில் தொலைக் காட்சியானது குடும்பங்களில் உறவு வளரக் காரணமாய் அமையும் எனக் கருதினர். முழுக்குடும்பமும் தொலைக்காட்சி முன் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது குடும்பத்துக்குள் உறவு வலுப்படும் எனக் கருதினர். ஆனால் அந்த நம்பிக்கை விரைவில் தகர்ந்தது. மேலை நாடுகளில் பெரும்பாலான வீடுகளில் ஒரே வீட்டில் ஒவ்வொருவரும் தங்களுக்கென ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை வாங்கி வைத்துக் கொண்டனர். அவரவர் அறைகளில் அமர்ந்தபடி தனித்தனியாக




இருக்க முடிவதில்லை. 'டி.வி. யைப் போடு ஏதாவது பார்க்கலாம்' என்கின்ற மனநிலைக்கு வந்துவிடுகின்றனர்.

மது அடிமை, போதை அடிமை போல் இதுவும் ஒருவகை அடிமைத்தனம்தான் என்கின்றனர் உளவியலாளர்கள். தொலைக் காட்சியைப் பார்ப்பதற்கு ஒருவித சமூக அங்கீகாரம் நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தொடங்கி விட்டனர். அதன் காரணமாகத் தொலைக்காட்சியின் வருகைக்கு முன் இருந்ததைவிட உறவின் ஆழம் குறைந்து விட்டது.

நமது நாட்டில் பொருளாதார மற்றும் இடவசதி காரணமாக இன்னும் அந்த நிலை ஏற்பட்டுவிடவில்லை. எனினும் தொலைக்காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி பார்ப்பதென்பது ஒரு தனிப்பட்ட நிகழ்வாகவே அமைகின்றது. அந்தச் சமயம் எந்தக் குறுக்கீட்டையும் நாம் அனுமதிப்பதில்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கேற்ப நாம் சிரிக்கின்றோம், அழுகின்றோம் ஆனால் அது கூட்டுச் செயற்பாடு அல்ல. தொலைக்காட்சி நமது சமூகத் தொடர்பு திறன்களை பெரிதும் பாதிக்கின்றது என்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள். நிகழ்ச்சிகளை நாம் ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும்போது குறுக்கிடும் எவரும் நமக்கு எதிரிகளே. யார் எந்த நிகழ்ச்சியைப் பார்ப்பது என்பதில் குடும்ப உறவுகளில் சிக்கல்கள் நேரிடுவதைக் கூட காண நேரிடுகிறது.

- தொடரும் -

# இலங்கைத் தேர்தல்களில்

## ஒரே குடும்பத்தில் இருந்து போட்டியிட்டோர்:






1. றெஜி ரணதுங்க - தந்தை - கம்பஹா
2. அர்ஜுன ரணதுங்க - மகன் - கொழும்பு

1. பிலிப் குணவர்த்தன - தந்தை
2. தினேஸ் குணவர்த்தன - மகன்
3. இந்திக்க குணவர்த்தன - மகன்
4. கீதாஞ்ச குணவர்த்தன - மகன்

} பொ.ஜ.மு

5. பிரசன்ன குணவர்த்தன - மகன் - ஐ.தே.க

1. தர்மதாச வன்னியாராச்சி - தந்தை
2. பவித்திரா வன்னியாராச்சி - மகள்

} இரத்தினபுரி பொ.ஜ.மு

1. இரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்க - தந்தை
2. விதுரஇரட்டணஸ்ரீ விக்கிரமநாயக்க - மகன்

} களுத்துறை பொ.ஜ.மு

1. காமினி அத்துக்கோரள - அண்ணன் - ஐ.தே.க
2. தலதா அத்துக்கோரள - .......... - சுயேச்சை

} இரத்தினபுரி

1. S. W. R. D. பண்டாரநாயக்க - தந்தை
2. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க - தாய்
3. அனுரா பண்டாரநாயக்க - மகன்
4. சந்திரிக்கா பண்டாரநாயக்க - மகள்

} பொ.ஜ.மு

1. D. S. சேனநாயக்க - தந்தை
2. டட்லி சேனநாயக்க - மகன்

} ஐ.தே.க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போகிறது இந்த உலகம்

"அம்மா, ஐயா பிச்சை தாங்க...." நகரத்தின் வீதியில் இவ்வோசை கேட்கிறது. பெயர்தான் நகரம். ஆனால், நகரம் என்றோ, கிராமம் என்றோ கூறமுடியாத ஒரு கடைவீதி என்றுதான் கூற வேண்டும். அதிகளவு சனக்கூட்டமோ வாகன நெரிசலோ இல்லை. ஆனாலும் ஒரு பரபரப்பு அங்கும் காணப்பட்டது. மனிதர்கள் ஏதோ அவசர உலகில் சஞ்சரிப்போர் போன்று ஓடி ஓடிப் பொருட்களை வாங்கி, இயந்திரங்கள் போல வீடுகளுக்கு அவசர அவசரமாகச் செல்வதில் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். இவற்றுக்கிடையில் "ஐயா, அம்மா, பிச்சை தாங்க" என்ற குரல் மீண்டும்.

பொருட்களை வாங்கிக்கொண்டிருந்த நான் சட்டெனத் திரும்பினேன். இரு பெண் குழந்தைகள். ஒருத்தி பத்து வயதிருக்கலாம் அடுத்தவள் எட்டு வயதுதானிருக்கும். அதில் சிறியவள் கையால் என்னைச் சுரண்டிக்கொண்டேயிருந்தாள். எனக்கு யாரும் என்னைக் கையால் தட்டிப் பேசுவது பிடிக்காது. எனவே, உள்ளூரக் கோபத்துடன் திரும்பிய எனக்கு அருவருப்பும் ஏற்பட்டது. பரட்டைத் தலையுடன், அத்தலை எத்தனை நாட்கள் தண்ணீர், எண்ணெய் காணவில்லையோ! அழுக்கான ஆடைகள், பிச்சை எடுப்போர்க்கு இலக்கணமே இவர்கள்தான் என்றாற் போல நின்றனர். ஏதும் கொடாவிட்டால் விடமாட்டார்கள் போலிருந்தது. ஆளுக்கு இரண்டு இரண்டு ரூபாய்க் குற்றிகளைக் கொடுத்துவிட்டு எரிச்சலுடன் சட்டென இடத்தைக் காலி பண்ணினேன்.



இது தொடர்ந்து நடைபெற்றது. இப்போதெல்லாம் சாதாரண வாடிக்கையாளர் போன்று பணம் வாங்கிச் செல்லும் அளவு சுவாரஷ்யமற்றுப் போனது இவ்விடயம். நாட்கள் உருண்டோடின.

ஒருநாள் கடைக்குப்போக வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தேன். வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கியதும் எதிரே அந்த இருவரும் இரு வீடுகள் தள்ளி நின்றுகொண்டிருந்ததைக் கண்டேன். சிறியவள் அழுதுகொண்டிருக்கப் பெரியவள் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாள். அருகே ஆர்வத்துடன் சென்றபோது "என்ன செய்யிற தங்கச்சி, பொறுத்துக் கொள்ளத்தான் வேணும். அவங்க அப்பிடித்தான். வா, மெல்ல நட. போய் ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா எண்டு பாப்பம்" என்று அக்கா ஆறுதல் கூறுவதையும், இருவரும் மெல்ல நடந்து செல்வதையும், சிறியவள் நொண்டி நொண்டி அழுதுகொண்டே செல்வதையும் கண்டேன். என்ன விடயம் என அறிய அவர்களை நெருங்கிச்சென்று "என்ன பிள்ளைகள்? என்ன நடந்தது? ஏன் இவள் அழுறாள்?" எனக் கேட்டபோது இருவருமே அழுதனர். மூத்தவள், "அம்மா... சுனாமியில அப்பா, அம்மா ரெண்டுபேரும் செத்திட்டாங்க. சின்னம்மா கொஞ்சநாள் முகாமில அவவோட வச்சிருந்தா. எங்கட வீட்ட கட்டித்தந்தாங்க. திரும்பி அங்க போனம். அதுக்குப்பிறகு பிச்ச எடுத்திட்டு வரச்சொல்லி ஏசி அனுப்பிட்டா" என்று கூற நானும் "அப்ப காசு கிடக்குமே அதை என்ன செய்வீங்க?" எனக் கேட்டேன். "அதச் சின்னம்மா வாங்கிருவா" என்றாள் மூத்தவள். நான் திருப்தியடையாமல் தொடர்ந்தும் "ஏன் நீங்க பள்ளிக்குப் போறல்லியா" எனக் கேட்டபோது கிடைத்த பதில் "இல்லம்மா ஒரு வருசம் தான் அனுப்பினா. பிறகு விடுறல்ல" நான் அசந்தே போனேன்.

சுனாமி நிவாரணம் கிடைத்திருக்குமே? என் சந்தேகத்தைப் போக்க "சுனாமிக்கு நிறைய உதவிகள் கிடைச்சிருக்குமே...." என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்தேன். "அதெல்லாம் சின்னம்மாதான் எடுப்பா" என்றாளவள். இப்ப ஏன் அழுததுகள்!... இதை யறியவேண்டுமென அடுத்த வினாவைத் தொடுத்தேன். இதுவரை பேசாது அழுது கொண்டிருந்த சிறியவள் "சின்னம்மா எனக்குக் காலில சூடு வச்சிட்டா" எனக் காட்டி அழுததும் நான் பதறி விட்டேன். "சூடா" என வாய் பிளந்த நான், "சின்னம்மா எண்டா யார் அவ" என்றேன். "சின்னம்மா எங்கட அம்மாட தங்கச்சி" என்றாள் பெரியவள். எனக்கு அதிர்ச்சி. மறுபடியும் "ஏன் சூடு வச்சா" என்ப தற்குச் சிறியவள் "காலம்பற நித்திரையால எழுப்பி, என்னையும், அக்காவையும் மா இடிக்கச் சொன்னா சின்னம்மா. எனக்குப் பசிக்குது சாப்பிட்டுட்டு இடிக்கிறன் எண்டன். சூடு போட்டா" என மீண்டும் அழுதாள்

என் மனம் இரக்கப் பட்டது. "ஏன் அவக்குப் பிள்ளைகளில்லியா?" என்ற போது, அவளுக்கு ஏற்கனவே நான்கு பிள்ளைகளிருப்பது தெரியவந்தது. "அவங்கள நல்லாப் பாப்பா, பள்ளிக்கனுப் புவா. எங்களத்தான்...." அழுதாள் பெரியவள். எனக் குள் ஒரு சிறிய எண்ணம். அது சரிவருமா இல்லையா என்று நினைத்துக்கொண்டே சாப்பாடு வாங்கிக் கொடுத் தேன். இருவரும் இரண்டு நாட்கள் உணவு உண்ணா தவர்கள் போல் ஒரு அவதியுடன் உண்டு முடித் தனர். நான் கையிலும் காசு கொடுத்து அனுப்பியபோது, மருந்து கட்டுமாறும் வலியுறுத்தி னேன். நானும் பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

எனக்குள் ஒரே போராட் டம். என்ன உலகமிது. பிள்ளைப் பேறின்றித் தவிப்போர் எத்தனை யோபேர். கோயில்கள், வைத்திய சாலைகள் என்றெல்லாம் ஓடியோடி



ஒரு குழந்தைக்காகத் தவமிருப் போர் ஒருபுறமிருக்க நான்கு பிள்ளைகள் பெற்ற ஒரு தாய் தன் இரத்தபந்தமான அக்காவின் பெண்குழந்தைகளை இப்படிப் பாடுபடுத்துவாளா? என்று சிந்தனை நீண்டு, ஏதாவது சாதிக்க முடிவெடுத்தது. முதலில் சேதமின்றி இருவரையும் காக்கச் சின்னம்மாவின் கெடுபிடியிலிருந்து மீட்கவேண்டியது தேவையாயிற்று. அடுத்து ஒரு நல்ல பாதுகாப்பான பராமரிப்பை வழங்குவது இன்னு மொரு தேவையானது. முடிவில் என் நண்பியான அருட்சகோதரியின் சிறுமியர் இல்லம் என் நினைவுக்கு வந்தது. நான் விடயத்தை முதலில் அவரிடம் கூறியதும் உடனே சம்மதித்தார்.

மறுநாள் அந்தச் சிறுமிய ருடன் நகர்க் காவல் நிலையம் சென்று விடயத்தைக் கூறி சின்னம்மாவின் கெடுபிடியிலிருந்து சிக்கலின்றி விடுவித்தேன். இல்லத் துக்கு அழைத்துச் செல்லுமுன் அவர்களது தோற்றத்தை மாற்ற வேண்டியிருந்தது. தெருப்புழுதி உச்சி முதல் உள்ளங்கால் வரை படிந்திருந்தது. உடலில் சொறி பரவியிருந்தது. குப்பைகள் பொறுக்கி யதால் வந்த வினையிது. தலைமுடி பரட்டையும் சிக்குமாக இருந்தது. ஒரு மணி நேரம் செலவழித்ததன் பின்னர் இருவரும் துப்பரவாகியதும், ஆடை களை அணிவித்து அழைத்துக் கொண்டு "சிறுவர் இல்லம்" சென்றேன்.

அருட்சகோதரி அன்புடன் வரவேற்றார். பின்னர் பாடசா லையிலும் அனுமதிக்கப்பட்டனர். ஆயினும், இந்த வாழ்வுக்குள் இணையமுடியாது ஆரம்பத்தில் அழுதுகொண்டேயிருந்தனர். ஆனால், இப்போது மிகவும் சாதாரணமானவர்களாக படிப்பில் ஆர்வமுள்ளோராய் சீருடையுடன் செல்வதைக் காண மிகவும் மகிழ்ச்சியாகவும், இரு உயிர்களைக் காத்த நிம்மதியும் ஏற்படுகிறது. எங்கே போய்க்கொண்டிருக்கிறது இன்றைய உலகம், என்ற சிந்தனையுடன் பெருமூச்சொன்றை விட்டு வீட்டுக்குள் நுழைகிறேன், வீட்டு வேலைகளைக் கவனிக்க.

– மெற்றில்டா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கையின் வடபகுதிக்கு யாழ்ப்பாணம் என்பது பெயராகும். அவ்வாறு பெயர் வரக் காரணம் யாழில் வல்ல பாணர்கள் தென்னிந்தியாவிலிருந்து வட இலங்கைக்கு வந்து அங்கே தம் இசை பொழிந்து குடியிருப்புகளை அமைத்துக் கொண்டதாக, வரலாறுகள் கூறுகின்றன. சங்க இலக்கியங்களில் பாணர்கள் பற்றிய வரலாறு கிடைக்கப்பெறுகிறது. அரசர்கள் தம்முடைய செல்வாக்கையும் நட்பையும் மக்கள் மத்தியில் நிலைநாட்டுவதற்கு பயன்படுத்து பவைகள் செப்பேடுகள், சிலாசாச னங்கள் இவற்றோடு கிடைக்கப் பெறுவதோடு அரசர்கள் புலவர்க ளைப் பெரிதும் ஆதரித்தனர் என்பது வரலாற்று உண்மை களாகும்.



இன்றைய பத்திரிகைகள், வெகு சனத் தொடர்பு சாதனங்கள் பெற்றுள்ள முக்கியத்துவமளவிற்கு அக்காலத்தில் புலவர் பெருமக்கள் பெற்றிருந்தனர். மன்னரின் ஆட்சிச் சிறப்பு, நேர்மை, நீதி மக்கள் பால் பாடப்பட்டன. இவை ஓலைகளில் எழுதி பிரதிகள் எடுக்கப்பட்டன.

புறநானூறு 72ம் பாடலில் மதுரைக் காஞ்சியில், பாட்டுடைத் தலை வனாகிய தலையானங் காலத்து செறுவென்ற நெடுஞ்செழியன் தன் ஆதரவில் இருந்த ஒரு புலவன் பற்றிக் குறிப்பிடுகின்றான். "பொழுது படும் முன்னர் பகைவரை புறம் கொடுத்து ஓடச் செய்யாவிடின் மாங்குடி மருதனைத் தலைவனாகக் கொண்ட புலவர் என்னைப் பாடாது விடுவாராக"

நெடுஞ்செழியன் என்ற மன்னனை மருதனார் என்ற புலவர், கடல் நடுவே தோன்றும் நிறைமதிக்கு ஒப்பிடுகிறார். "அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்டுறை வேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே" (புறநானூறு 14-16 பக்கம் 57). இவ்வாறு தம்மைப் பாடும் புலவர்களுக்கு அரசர்களும் பெரும் குரல் கொடுத்தனர். ஆட்சி நீடிப்பதற்கு உள்நாட்டுக் கலகங்கள் பொருந்தா. அரசன் தெய்வமெனப் போற்றப்படவேண்டும். அதற்குக் கருவியாகப் புலவர்கள் அமைந்தனர். மருத நிலம் ஏனைய நிலங்களைவிட செழிப்பு வாய்ந்தது. அந்நில மன்னர்களே உயர்வு பெற்றனர். மருத நாட்டுப் புலவர்களும் பெரும் புகழ் பெற்றனர். இங்கு நாம் குறித்த மாங்குடி மருதனார் ஓர் எடுத்துக்காட்டு மட்டுமே.




- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -

பாணன் பாடிணி பற்றி நாம் சங்க இலக்கியங்களிற் படிக்கின்றோம். பரிசு பெற்ற பாணன் ஒருவன் மற்றொரு பாணனைத் தான் பரிசு பெற்ற மன்னனிடம் வழிப்படுத்துகின்றான். ஆற்றுப்படுத்தல் என்பது சங்க இலக்கியச் சொல். மிக முற்பட்ட காலத்தில் ஆறுகளே பாதைகளாக இருந்ததால் இச்சொல் முக்கியம் பெற்றிருக்கலாம். இவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட யாழில் வல்ல பாணர்கள் பாடகர்கள் குடியேறி இலங்கையின் வடபகுதி அவர்களது பெயரால் யாழ்ப்பாணம் எனப் பெயர் பெறுகிறது.

கிழக்கிலங்கையில் கண்ணகி அம்மையின் தலம் பெற்றக் கிழக்கிலங்கைக் காரைதீவில் உதித்த விபுலானந்தர் பின்நாளில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி, வைத்தீஸ்வரர் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் முறையே ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றியவர். சேர நாட்டில் உதித்த இளங்கோவடிகள் சோழ நாட்டில் உதித்த கண்ணகியை பாண்டிய நாட்டில் வீரக் கொழுந்தாக்கி மாதவியின் நடனத்தையும் யாழையும் பிரசித்தப்படுத்தினார். இதனால் தூண்டப்பட்டோ என்னவோ பௌதீக விஞ்ஞானம் கற்று B.Sc பட்டதாரியாகிய விபுலானந்தர் வடக்கிலும், கிழக்கிலும் பெற்ற அநுபவத்தோடும் அண்ணாமலைப் பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்திலும், ஏனைய பல்கலைக் கழகங்களிலும் பெற்ற அனுபவத்தோடும் தமிழகம் வியக்கும் யாழ்நூலைத் தமிழ் அன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

வில்யாழ், பேரியாழ், சீரியாழ், மகரயாழ் செங்கோட்டுயாழ், சகோடயாழ் என்பவற்றோடு பல்வேறு துணைக் கருவிகள், மேல்நாட்டுக் கருவிகள் இசையின் பிரிவுகள், பண்ணியல் தேவாரவியல், இவை ஒழிந்த ஒழிபியல், எண்ணளவை, எண்கணிதம், கிராமவழக்கு அலங்காரங்கள் என்று பல்வேறு துறைகளிலும் தாழப் பார்க்கிறது விபுலானந்த அடிகளின் யாழ்நூல்.

ஆயிரம் நரம்புகளைக் கொண்ட HARP என்ற இசைக்கருவியை யாழோடு ஒத்த கருவியாகக் குறிப்பிடுகின்றார். ஈழநாட்டுப் பேராசிரியராகத் தொண்டாற்றிய சூழல் யாழ்நூலை ஆய்வு செய்ய அவருக்கு உதவின எனலாம். சிதம்பரச் செட்டியார் அவர்கள் இந்நூல் ஆக்கத்திற்கு அவருக்குத் துணை புரிந்தார்கள். சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதை உள்ளே அமைதி கூறும் இயைந்ததொரு நூலாக இந்நூல் எடுத்துக்கொள்ளப் பட்டது. மேற்குறிப்பிட்ட யாழ்நூலையும் விபுலானந்தர் கூறுவதற்குக் காரணம் தமிழ் கூறும் நல்லுலகம் நம் முன்னோர் இசைக்கலைக்கு அளித்த முக்கியம் பற்றி ஓரளவு தெளிவுபடுத்தவே. யாழ்நூலை முற்றுமுழுக்க விளங்கிக்கொள்ள இசைஞானம் மட்டுமல்லாது பௌதீக விஞ்ஞான அறிவும், ஆழமான அறிவியலும் நுண்ணறிவும், இசையும் கலையும் ஒருங்கே அமையவேண்டும். இந்த நோக்கில் விபுலானந்த அடிகளாரை முற்றும் துறந்த முனிவரென நாம் வருணிக்க இயலாது. அவர் ஓர் அறிஞர். இது மிகைபடக் கூறும் கூற்று அன்று. விபுலானந்த அடிகளார் துறக்காத துறைகளில் இசையும் தமிழும் முக்கிய இடம் பெறுகின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

முடிவாக, பல்வேறு சாகித்தியங்களைக் கொண்ட இலங்கை மக்களின் கலைகளையும், கலை வாழ்வையும், இந்தியக் கலைகளையும், அவை மக்கள் மனதில் பின்னிக் கிடப்பதையும் எடுத்துக் கூறுவதே 'எமது வாழ்வும் கலையும்' என்ற இக்கட்டுரையின் நோக்கமாகும்.



கிறீஸ்தவ எழுத்தாளர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்களிலும் ஓயாது தளராது தொடர்ந்து எழுத்துப் பணியில் இயங்கி வருபவர் ஜோசப் பாலா.

எழுத்தாளர், பத்திரிகையாளர், நூலாசிரியர், வெளியீட்டாளர் என்று பன்முக ஆளுமையோடு நீண்ட காலமாக உற்சாகம் குன்றாது பணியாற்றும் ஜோசப் பாலா அவர்கள், உளவளத்துறையிலும் ஈடுபாடு கொண்டு இயங்கி வருபவர். தற்போது யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக்கில் ஊக்குவிப்புத் திட்ட

## எழுத்தாளர் ஜோசப் பாலாவுக்கு பாராட்டு

இணைப்பாளராகப் பணியாற்றும் அவரை நேரடியாகச் சந்தித்தது ஒரேயொரு முறைதான். அதுவும் ஏறத்தாள 24 ஆண்டுகளுக்கு முன். ஆனாலும் நான் மறந்தாலும் தான் மறவாது அடிக்கடி அஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு, தமது நலன்கள், பணிகள் பற்றிப் பகிர்ந்துகொள்வதோடு எம்மையும் விசாரித்து உற்சாகப்படுத்தி வருபவர்.

அண்மையில் குருநாகலில் நடைபெற்ற தேசிய கரித்தாஸ் ஊக்குவிப்புத் திட்ட செயற்குழுக் கூட்டத்தில் ஜோசப் பாலாவின் எழுத்துலகப் பணியைப் பாராட்டி 'உள சமூகச் சீராளன்' என்ற பட்டமளித்து, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. குருநாகல் கரித்தாஸ் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு இயக்குனர் Fr. அஜித் பெர்னான்டோ தலைமை தாங்கினார்.


சமய-சமூகப் பணிக்காகவே தம்மை அர்ப்பணித்து அயராது பணியாற்றும் திரு. ஜோசப் பாலா அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து பணிகள் பல ஆற்றிச் சிறக்க மகிழ்வோடு வாழ்த்துகிறோம்.

– மலர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' திரு. த. கிருபைராஜா அவர்களைச் சந்தித்தோம். பிரபல வர்த்தகவியல் துறை ஆசிரியராகக் கடமையாற்றும் இவர், மட்டக்களப்பு மத்தியஸ்த சபை உறுப்பினராகப் பணியாற்றுகின்றார். இவரிடம் மத்தியஸ்த சபையைப் பற்றியும், அதன் கட்டமைப்புகள், பணிகள் பற்றியும் வினவினோம். மிகவும் குறுகிய கால அவகாசத்தில் திரு. த. கிருபைராஜா அவர்கள் இச்செவ்விக்கான ஏற்பாடுகளை எமக்குச் செய்து தந்தமைக்காக அவருக்கு எமது நன்றிகளும் பாராட்டுகளும்.**

**மத்த்தியஸ்த சபைகள் (MEDIATION BOARD) பற்றி சற்றுச் சொல்ல முடியுமா...?**

1988ம் ஆண்டின் 72ம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இச்சட்டப்படி 1990ம் ஆண்டு தொடக்கம் மத்தியஸ்த சபைகள் இலங்கையில் தாபிக்கப்படத் தொடங்கின. வடக்கு கிழக்கில் 1997ம் ஆண்டளவில் தான் இவைகள் செயற்படத் தொடங்கின.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் இச்சட்டத்தை அமுல் செய்வதற்கு ஐந்துபேர்களைக் கொண்ட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வாணைக்குழுவானது உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற மூன்று நீதிபதிகளைக் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டும். அவர்களில் ஒருவர் இவ்வாணைக்குழுவின் தவிசாளராக இருப்பார்.

**இவ்வாணைக்குழுவின் கடமைகள் என்ன?**

இச்சட்டத்தின் கருமங்களை நிறைவேற்றுவதற்கான மத்தியஸ்தர்களை நியமித்தல், இடமாற்றஞ் செய்தல், பதவியிலிருந்து அகற்றுதல், அவர்களின் ஒழுக்காற்றைக் கட்டுப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் ஏனைய ஏற்பாடுகளை வழங்குதல் என்பன இவ்வாணைக்குழுவின் தத்துவங்களாகும்.

**மத்தியஸ்த சபையின் இடப்பரப்புகள் எவையென வரையறுக்கப்படுகின்றன?**

கௌரவ நீதியமைச்சரால் காலத்திற்குக் காலம் வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் மத்தியஸ்த சபையின் பிரதேசங்கள் குறித்துரைக்கப்படும் என சட்டத்தில் காட்டப்பட்டுள்ளது. தற்போது பிரதேச செயலகப் பிரிவொன்று மத்தியஸ்த சபைப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**மத்தியஸ்த சபையின் கடமைகள் என்ன?**

மத்தியஸ்த சபையின் கடமைகளை சட்டத்தின் 10ம் பிரிவு பின்வருமாறு கூறுகின்றது. 'ஏதேனும் பிணக்கு அல்லது தவறு ஏதேனும் சபைக்கு ஆற்றுப்படுமிடத்து, பிணக்குக்காரர்களை சுமுகமான தீர்வொன்றுக்குக் கொண்டுவருவதற்கும் அவர்களின் சம்மதத்தோடும் நடைமுறைச் சாத்தியமுள்ளவிடத்துப் பிணக்கு அல்லது தவறு மீழ நிகழாமல் தடுக்கும் வகையில் அவர்களுக்கிடையில் மனவருத்தத்திற்கான உண்மைக் காரணத்தை அகற்றுவதற்கும் எல்லாச் சட்ட முறையிலான வழிகளாலும் முயற்சி செய்வது அத்தகைய சபையின் கடமையாதல் வேண்டும்'

**மத்தியஸ்த சபையின் உறுப்பினர்கள் எவ்வாறு தெரிவுசெய்யப்படுகின்றனர்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தன்மையற்ற ஆட்களிடமிருந்தும் குழுக்கள் அல்லது ஒழுங்கமைப்புகளிடமிருந்தும் அத்துடன் மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்தும் ஆட்களின் பெயர் விபரங்கள் கோரப்பட்டபின் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர். தெரிவு செய்யப்பட்ட மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு ஆணைக்குழுவானது, மத்தியஸ்த சட்டங்களிலும், தொழில் நுட்பங்களிலும் பயிற்சியளிக்கும். தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் நியமனங்கள் அரச வர்த்தமானி மூலம் உறுதிப்படுத்தப்படும். உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப்படமாட்டாது.

**'மத்தியஸ்தர் சபைக்கு' எவ்வாறு பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன?**

பின்வரும் தரப்பினரிடமிருந்து பிணக்குகள் கிடைக்கப்பெறுகின்றன.

1. தனிப்பட்ட நபர்களிடமிருந்து..
2. நீதிமன்றங்கள் மூலம்..
3. பொலிஸ் நிலையங்களிடமிருந்து கடன்கள், கொடுக்கல் வாங்கல் தொடர்பாக..
4. அரச வங்கிகள்..
5. அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து..

**மத்தியஸ்த சபையினால் ஏற்றுக்கொள்ளப்படலாகாத பிணக்குகளும் உள்ளனவா?**

ஆம்! மத்தியஸ்த சபைச் சட்டத்தின் 3ம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணக்குகள், அரசாங்க ஆதனம், பணம் அறவிடுதல், ஏதேனும் ஒரு காரியம் நிறைவேறாமை போன்ற அரசாங்கத்தை ஒரு கட்சிக்காரராகக் கொண்ட பிணக்குகள் (அரசாங்கக் காணிகளை உடைமையாக்குதல், பங்கீடு செய்தல் போன்ற பிணக்குகள்), தவறு ஒன்று தொடர்பில் சட்டத்துறை தலைமையதிபதியினால் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்கள். இவற்றினை மத்தியஸ்த சபை ஏற்றுக்கொண்டு விசாரிக்க இயலாது.

**திரு. தம்பிராஜா கிருபைராஜா அவர்களே! நீங்கள் எப்பிரதேச மத்தியஸ்த சபையில் அங்கம் வகிக்கின்றீர்கள்?**

மட்டக்களப்பு மத்தியஸ்த சபையின் உறுப்பினராகப் பணியாற்றுகின்றேன். இந்த மத்தியஸ்த சபை 1997.10.25ல் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கிவருகின்றது. இதன் குறியீட்டு இலக்கம் 222 ஆகும். நான், 1988.07.15ல் ஆணைக்குழுவால் தெரிவுசெய்யப்பட்டேன். மட்டக்களப்பு மத்தியஸ்த சபையில் துறைசார் பயிற்சி பெற்ற 15 உறுப்பினர்கள் உள்ளனர். ஆரம்பகால தவிசாளராக திரு. A. நவரெட்ணம் அவர்கள் கடமையாற்றினார். தற்போது திரு. S. இரத்தின சபாபதி அவர்கள் தவிசாளராக உள்ளார்.

**உங்கள் அனுபவத்திலிருந்து வருடாந்தம் சராசரியாக எத்தனை பிணக்குகளை மத்தியஸ்த சபை கையாளுகின்றது?**

தனிப்பட முறையில் சுமார் 90 பிணக்குகளும், நீதிமன்றம் மூலம் சுமார் 65 பிணக்குகளும், பொலீஸ் நிலையம் மூலம் 85 பிணக்குகளும் தாக்கல் செய்யப்படுகின்றன. இவற்றில் 70% பிணக்குகள் சமாதானமாகத் தீர்க்கப்படுகின்றன. 10% பிணக்குகள் வாபஸ் பெறப்படுகின்றன. 08% பிணக்குகள் எதிர்த் தரப்பினர் வராமையால் தீர்க்கப்படுகின்றன. 05% பிணக்குகள் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப் படுகின்றன. 07% பிணக்குகளில் தீர்க்கப்பட்டமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**மத்தியஸ்த சபைக்கான நிதியுதவிகள் எவ்வாறு கிடைக்கப்பெறுகின்றது?**

ஆணைக்குழுவானது, தபால் செலவு, காகிதாதிகள் செலவு போன்றவற்றிற்கான நிதியுதவிகளை வழங்குகின்றது.

**சபை சிறப்பாகச் செயற்பட ஒத்துழைப்புகள் எவரால் வழங்கப்படுகின்றது?**

நீதிமன்றம், பொலீஸ் நிலையம், பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள் என்போரும் மத்தியஸ்த சபை கூடும் இடத்தின் உரிமையாளர்கள், குறிப்பாக பாடசாலை அதிபர்கள் கட்டிடம் தந்து உதவுகின்றார்கள்.

**பிணக்கொன்றைத் தீர்ப்பதற்குக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கால வரையறையொன்று உண்டா?**

➡ பெரும்பாலும் 30 நாட்களுக்குள் பிணக்கைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**மத்தியஸ்தர் ஒருவரின் பண்புகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**

➡ நடுநிலைமையுள்ளவராகவும், அந்தரங்கத்தைப் பாதுகாப்பவராகவும் வளங்கள், தொழில்நுட்ப (மத்தியஸ்தத்திற்காக) அறிவு, திறமை என்பனவற்றை தொடர்ச்சியாக வளர்த்துக்கொள்பவராகவும் இருக்கவேண்டும். எனினும் மத்தியஸ்தர் ஒருவர் தான் சட்டத்தரணியோ, நீதிபதியோ அல்ல என்பதனையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

*இறுதியாக திரு தம்பிராஜா கிருபைராஜா அவர்கட்கு தொண்டனின் சார்பில் நன்றிகூறி விடைபெற்றுக் கொண்டோம். இவர் 1962.02.13ம் திகதி பிறந்தவர். ஆழ்ந்த இறைபக்தி கொண்டவர். இவர் அதிகம் விரும்பும் விவிலியத் திருவசனம் பின்வருமாறு:*

*"நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்" (மத்தேயு 5:6)*

- ஆழியோன் -

# எல்லோரும் உங்களை நேசிக்கவேண்டுமா?

- உதவி செய்யுங்கள்
- நட்புணர்வுடன் பழகுங்கள்
- நன்கு கவனித்துக் கேட்பவராக இருங்கள்
- பிறரை மன்னிக்கும் கலையைக் கற்றுக்கொள்ளுங்கள்
- வெளிப்படையாகவும் திறந்த மனதுடனும் உண்மையாகவும் இருங்கள்
- தாராள சிந்தனையுடனும் பெருந்தன்மையுடனும் இருங்கள்
- எப்போதுமே உதவிக் கரம் நீட்டத் தயாராக இருங்கள்
- எல்லோரிடமும் கனிவுடனும் மரியாதையுடனும் இருங்கள்
- தன்னம்பிக்கையோடு இருங்கள், ஆனால் கர்வம் கொள்ளாதீர்கள்
- உரையாடலில் ஒருபோதும் நீங்களே பேசிக்கொண்டிராதீர்கள்
- பிறர் மீது உண்மையான ஆர்வத்தைக் காட்டுங்கள்
- பிறரை ஒருபோதும் விமர்சிக்காதீர்கள்; கனிவற்ற மொழிகளைப் பேசாதீகள்
- பிறரிடமுள்ள நற்குணங்களைக் காணுங்கள்; அவர்களிடமுள்ள குறைகளைத் தேடாதீர்கள்
- காயங்களை மன்னித்து மறந்துவிடுங்கள், ஆனால் நன்மைகளை ஒருபோதும் மறக்காதீர்கள்
- ஆரோக்கியத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். அதன் மூலம் வலிமை மற்றும் துணிவை வெளிக்காட்டுங்கள்
- உங்களது வெற்றியைப் போலவே பிறரது வெற்றியிலும் உண்மையாக உவகை கொள்ளுங்கள்
- எப்போதும் பிறரது உரிமைகள் மற்றும் உணர்வுகள் பற்றி அக்கறை கொள்ளுங்கள்
- நன்கு மகிழ்வு கொள்ளுங்கள். ஆனால் கேளிக்கை என்பது ஒழுக்கக் கேடாகத் தரமிழந்து போவதற்கு அனுமதிக்காதீர்கள்
- எல்லோருக்கும் இன்சொல்லையும் உற்சாகமான ஊக்கமளிக்கும் புன்முறுவலையும் வழங்குங்கள்
- மிகவும் சோதனையான காலங்களில் கூட உங்களைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள்
- பெண்கள்பால் எப்போதும் மரியாதையுடனும் பண்புடனும் நடந்துகொள்ளுங்கள்
- கஷ்டத்தை துணிச்சலுடன் சந்தியுங்கள். உங்களால் சரிசெய்ய முடியாததை மகிழ்ச்சியுடன் பொறுத்துக்கொள்ளுங்கள்
- மனிதர்களின் சகோதரத்துவத்தை நம்புங்கள். வகுப்பு பேதங்களை ஏற்றுக்கொள்ளாதீர்கள்
- விடாப்பிடியான கருத்துகளைக் கொண்டிராமல் பிறரது கருத்துகளையும் கவனித்துக் கேளுங்கள்
- எவருடைய உணர்ச்சிகளையும் புண்படுத்தும் வகையிலோ, அல்லது எவரையும் காயப்படுத்தும் வகையிலோ, நகைச்சுவையாகப் பேசாதீர்கள்
- இலட்சிய ஆர்வத்துடனும், சுறுசுறுப்புடனும் இருங்கள். ஆனால் ஒருபோதும் பிறரது நட்டத்தில் இலாபமடைய முயலாதீர்கள்
- உங்களுக்குச் சமமாக உள்ளவர்கள் மற்றும் உங்களைவிட உயர்நிலையில் உள்ளவர்களிடம் நடந்துகொள்வது போலவே, உங்களை விடத் தாழ்வான நிலையில் உள்ளவர்களிடமும் மரியாதையுடனும் நட்புறவுடனும் நடந்துகொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகையே ஆட்டிப்படைக்கும் ஒரு பெரும் பிரச்சினையாக போதைவஸ்து தலைதூக்கித் தாண்டவமாடுகிறது. இப்போதைவஸ்தானது இன்று இளந்தலைமுறையினரையே பெரிதும் ஆக்கிரமித்து,




சமூகச் சீர்கேடுகளை உருவாக்கி, இளைஞர்களின் எதிர்கால வாழ்க்கையையே சின்னாபின்னமாக்கி சீரழித்தும் விடுகிறது. இளந்தலைமுறையினரை வழிதவற வைக்கும் போதைப்பொருட்களாக: சிகரெட், மதுபானங்கள், கசிப்பு, ஹெரோயின், குடு, கஞ்சா, அபின், மரியுவானா (Marijivana), அம்கெற்றாமைன்ஸ் (Amphetamines), பாபிற்றுரேற்ஸ் (Barbiturates), றான்குயிலிசேஸ் (Tranquilizes), நாக்கோற்றிக்ஸ் (Narcotics), கொக்கையின் (Cocaine), பென்சிலிடையின் (PCP), வொலரைல் கெமிகல்ஸ் (Volatile Chemicals), எல்எஸ்டி (LSD), பெத்தடீன் (ஊசி மூலம் செலுத்துவது) போன்றவை உள்ளன.

இக்கொடிய போதைவஸ்துகளால் 1% நன்மை கூடக் கிடையாது. 100க்கு 100% தீமைகளே உண்டு. இளந்தலைமுறையினர் இதன் விபரீத விளைவுகளை அறியாது, ஆரம்பத்தில் விளையாட்டாகவே பயன்படுத்த விழைவார்கள். இறுதியில் போதைவஸ்து அவர்களை அடிமைகளாக்கி அதல பாதாளத்திற் தள்ளியும் விடுகிறது. சில போதைப் பொருட்களை ஒரு தடவை பயன்படுத்தியவன் மீண்டும் மீண்டும் அதைப் பயன்படுத்த தீராத ஆவலாக ஓடுவான். அப்போது அதைக் கொள்வனவு செய்வதற்குரிய பணத்தை தவறான வழியிற் தேடவும் அஞ்சமாட்டான். அதிகூடிய புத்திசாலிகளையும் விவேகிகளையும் கூட போதைவஸ்து விழுங்கிவிடும். எனவே, இளந்தலைமுறையினர் மிக மிக அவதானமாகவும் வருமுன் காக்கும் வீரர்களாகவும் மாற வேண்டும்.

ஆரம்பத்தில் உற்சாகமும், ஆர்வமும் கூடியதாகவும் வானிற் பறப்பது போலவும், இன்பத்தில் அடித்துச் செல்வது போலவும் பரவசமூட்டிவிட்டு இறுதியில் நரம்புமண்டலத்தையே செயலிழக்கச்செய்து, நிதானமற்ற விசரர்கள் போன்று நடைப் பிணமாக அலைய விட்டு விடும். எனவே இளைஞர் தமக்குத் தாமே பாதுகாப்பாகவும், அறிவுரை வழங்குபவராகவும் செயற்பட வேண்டும். போதைக்கு அடிமையானோர் மீழ்வது அரிதிலும் அரிது.

போதைவஸ்தானது பல்வேறு நிலைகளிலும், பல்வேறு கோணங்களிலும், பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும், பல்வேறு அளவுகளிலும் பாவிக்கப்படுகிறது. போதைவஸ்தானது புகை வடிவாகவும், குளுசை வடிவாகவும், திரவ வடிவாகவும், ஊசி வடிவாகவும், டொபி வடிவாகவும் உள்வாங்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பாவிப்பதால் உடல் ரீதியான தீங்குகள் மட்டுமல்ல உள ரீதியான, சமூக ரீதியான தீங்குகள் அதிகம் ஏற்பட்டு பெற்றோர்க்கு மட்டுமல்ல, உற்றார் உறவினர், அயலவர்கள் அனைவர்க்குமே பெரும் தொல்லை கொடுப்பவராக மாறி, சமூகப் பிறழ்வுபட்ட காரியங்களில் ஈடுபட்டு சமூகச் சீரைக் குலைக்கும் நிலை உருவாகலாம்.

ஊசி மூலம் போதைவஸ்தை உடலிற் பாவிக்கும்போது ஒரே ஊசியைப் பலரும் பாவிப்பதால் 'எயிட்ஸ்' நோய் பரவவும் வாய்ப்புண்டு. அளவு மீறி போதைப் பொருட்கள் உள்ளெடுக்கப்படும்போது 'கோமா' நிலைக்குத் தள்ளப்பட்டு மரணமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படலாம். இலங்கையில் மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் (Alcohol and Druginformation Centre) நடத்திய ஆய்வின் பிரகாரம் புகைப் பிடிப்போரில் 15% ஆனோர் 11 வயதிலேயே முதல் முதலாக புகைக்கத் தொடங்குகின்றார்கள். பின்பு படிப்படியாக ஏனைய போதைப் பொருட்களையும் பயன்படுத்தப் பழகுகிறார்கள். புகையிலுள்ள 'நிக்கோட்டின்' எனப்படும் நச்சுப் பொருள் இதயத்தையும், நரம்புகளையும் முதலில் ஊக்குவிக்கிறது. பின்பு நுரையீரலையும், இதயத்தையும், நரம்பு மண்டலங்களையும் பாதிக்கின்றது. புகைப்பதால், புகைப்பவர்களுக்கு மட்டுமல்ல அருகிருப்போரும் பெரிதும் பாதிப்படைவர். இரத்த அழுத்தமும், புற்றுநோயும் புகைப் பிடிப்பதால் ஏற்படுகிறது.



'அல்ககோலிசம்' (Alcoholism) என்பது இன்று உலகில் மிகப்பெரிய வியாதியாகி விட்டது. ஐரோப்பிய நாடுகளைப் பெரிதும் பாதிக்கும் போதைவஸ்துகளாக மரியுவானா, ஹரிஸ்கம், கன்னாபிஸ்சற்றைவா (Conna bis Sativa), ஹிரோயின் என்பன இனங்காணப்பட்டுள்ளன. இவை அமெரிக்காவையும் பதம்பார்க்கத் தவறவில்லை. அடுத்து, உடற் கிளர்ச்சியைத் தூண்டும் இன்னொரு இரசாயனப் போதைப் பொருளாக கொக்கையின் (Cocaine) கொக்காச் செடியிலிருந்து பெறப்படும் வெண்ணிறப் பவுடராகும். இதனை ஒரு தரம் பயன் படுத்தியவர் இதனை மீண்டும் மீண்டும் பயன்படுத்த தவறான வழிகளில் கூடப் பணம் தேடி வாங்குவார்கள்.

இலங்கையில் 72 சதவீதமான இளைஞர்கள் போதைப் பழக்கங்களுக்கு அடிமையாகி வருவதாக தகவல்கள் சொல்கின்றன. மிகத் தீவிரமாக போதைப் பொருள் தடுப்புக் கல்வியை பாடசாலை மட்டங்களில் போதிப்பதுடன் கட்டுரை, பேச்சு, விவாதம், நாடகம், சித்திரப் போட்டிகளை நடாத்தி மாணவர்களுக்கு இதன் தீமைகளை உணர்த்த வேண்டும்.

போதை அரக்கனின் கரங்களில் சிக்கியோரை அவன் பிடியிலிருந்து மீட்பதற்கு மனுக்குலம் மனிதநேயத்துடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். சரியான நிகழ்ச்சித் திட்டங்களை சரியான நேரங்களில் அமுல்படுத்தி மனுக்குலத்தை மீட்க வேண்டும். இது இன்றைய காலத்தின் தேவையாகும். இது ஒரு புனித யுத்தம். பெற்றோரும் இணைந்து உங்கள் வாரிசுகளைக் காப்பாற்றுங்கள்.

– வயலற் சந்திரசேகரம் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தினங்களை வாழ்த்த வேண்டுமா ?



தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு
தீபாவளி என்று வந்துவிட்டால்
நமது கவிஞர்களுக்கெல்லாம்
உற்சாகம் பிறந்துவிடும்
பேனாவும் கையுமாக உட்கார்ந்துவிடுவார்கள்
தைமகளே வருக!
சித்திரைப் புத்தாண்டே சிரித்திடுக!
தீபாவளித் திருநாளே வளம் தருக
என்று ஆளாளுக்குக் கவிதைபாட
ஆரம்பித்துவிடுவார்கள்
நமது பத்திரிகைகளும் பக்கம் பக்கமாக
அவற்றை வெளியிடும்
தேவைதானா இந்தச் செயற்பாடுகள்
ஒவ்வொரு வருஷமும்
இதே பல்லவியைப் பாடுவார்கள்
ஆனால் நடப்பதெல்லாம் நேர்மாறு
அப்புறம் எதற்காக இந்த வாழ்த்துகள்
சோதிடர்கள் வேறு பக்கம் பக்கமாக
அளப்பார்கள். எப்போதாவது
அவை நடந்ததுண்டா?
ஒன்றுமட்டும் நிச்சயம்
உழைப்பும், தன்னம்பிக்கையும்
விடாமுயற்சியுமே நம்மை முன்னேற்றும்
விசேட தினங்கள் அல்ல
அவை ஆண்டுக்கொருமுறை
வழக்கம் போலவே வந்து செல்லும்
அத்தினங்களை அதன்பாட்டில் விட்டுவிடுங்கள்
கவிதை எழுதுவதானால்
ஏதாவது ஆழ்ந்த பொருளைப்பற்றி எழுதுங்கள்
இனி ஒரு விதி செய்வோம்
அதை எந்நாளும் காப்போம்
விசேடதினக் கவி எழுத நம்
பேனாவைத் தூக்கவே மாட்டோம்

**- அருள்மணி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம் ஏன்? எதனால்?

அச்சம், வெட்கம், சோகம், மன உறுத்தல், குற்ற உணர்வு போன்ற நம் உள்ள உணர்வுகளே கோபம் அல்லது சினமாக நம்மால் வெளிப்படுத்தப் படுகின்றது.

கோபம் என்பது ஆக்கபூர்வமானதா, அழிக்கக்கூடியதா என்பது நாம் அதை வெளிப் படுத்தும் முறையில்தான் இருக்கிறது. வேறுசிலர் கோபத்தைப் பிறர் மூலம் பிரதிபலிக்க முயற்சிக் கின்றனர். இவர்கள் எப்பொழுதும் முணுமுணுப்பது, தன்னை யாவரும் கொடுமைப்படுத்துவதாக முறையிடுவது, தன் தவறுகளுக்குப் பிறரைக் குறை கூறுவது, பிறரைப்பற்றித் தவறான கருத்துகளைப் பரப்புவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

பொதுவாகக் கோபம் ஏற்படும்பொழுது கத்துதல், கூச்சலிடுதல், அழுதல், அடித்தல், சண்டையிடுதல் என்பவை பெரும்பாலானவர்கள் செய்வதே. பிறரை எப்பொழுதும் மட்டம்தட்டிப் பேசுதல், பொறுமையின்றி இருத்தல், பிறரைப் பற்றி வம்பு பேசுதல், தகாத வார்த்தைகள் பேசுதல், பிறரிடம் எப்பொழுதும் குற்றம் குறை கண்டுபிடித்தல், எந்தப் பேச்சையும் சண்டையாக மாற்றுதல், எதையும் மிக மிகச் சரியாக செய்ய வேண்டும் என வற்புறுத்தல், பிறருடன் ஒத்துப்போகா மலிருத்தல், ஓய்வெடுத்துக்கொள்ள மறுத்தல் போன்றவையும் நம் கோபங்களை வெளிப்படுத்தும் காரணிகளே. பிறரிடம் பேசுவதற்கே பயப்படுவது, யாரையும் எதற்கும் மறுத்துப் பேசாமல் அஞ்சி நடப்பது, பிறரைத் தவிர்ப்பது போன்றவையும் ஒரு வகையான கோபத்தை வெளிப்படுத்தும் விதமாகும். இந்த வகையைக் கையாளுபவர்கள் அச்சம் அல்லது பயம் என்ற உள்ளுணர்வை வெளிப் படுத்துகின்றனர்.



எப்பொழுதும் அதிகாரம், ஆட்டிப்படைக்கும் செயலைச் செய்பவர்கள், யாரிடமும் இல்லை, முடியாது என்ற வார்த்தையைக் கேட்க மறுப்பவர்கள், பிறரைப் பயன்படுத்தவும், புண்படுத்தவும் தயங்காதவர்கள் வெளிப்படுத்தும் கோபம் முரட்டுத்தனமாய் அமைந்துவிடும். இவர்கள் பெரும்பாலும் குற்றஉணர்வு, தாழ்வு மனப்பான்மை இவற்றால் தாக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

வேறுசிலர் கோபத்தை நேரடியாகக் காட்டாமல் மறைமுகமாக, முதுகுக்குப் பின்னால் வேலை செய்பவர்களாய் இருக்கின்றார்கள். இவர்கள் கோள் மூட்டுதல், வம்பு பேசுதல், ஒத்துழையாமல் தட்டிக்கழித்தல் போன்றவற்றையும் செய்யக் கூடியவர்கள். இவர்களும் தாழ்வு மனப்பான்மை, பயம், பொறாமை போன்ற உணர்ச்சிகளால் அவதிப்படுகின்றனர்.

ஆனால், ஒருசிலரே தங்கள் கோபத்தை வெளிப்படையாக ஒளிக்காமல், அதே சமயம் பிறரைப் புண்படுத்தாமல் ஆனால் கண்டிப்பாகவும் நிச்சயமாகவும் தங்களின் உணர்வை வெளிப் படுத்திக் கொள்கிறார்கள். எதிராளியின் கற்பனைக்கு விட்டுவிடாமல் தங்கள் கருத்துகளைத் துணிவுடன் வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் தங்கள் செயல்களின் காரணங்களைப் பொறுமையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகின்றனர். பிறரை மதிப்பதுடன் தங்களையும் பிறர் மதிக்கும்படி பேசி செயல்படுகின்றனர்.

ஒவ்வொருவரும் தங்கள் நிலைமை, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஒத்தவாறு வெவ்வேறு விதமாகக் கோபத்தை வெளிப்படுத்தினாலும், பெரும்பாலும் மேல் குறிப்பிட்ட வகைகளில் ஏதோ ஒன்றில் அடங்குகின்றனர். சினம் அல்லது கோபம் என்பது நம்மை நம் உடல் ரீதியிலும், மன நிலையிலும் நிலைகுலைய வைத்துவிடுகின்றது. கோபம் ஏற்படும் பொழுது சில இரசாயன மாற்றங்களை நம் மூளையில் ஏற்படுத்தி நம் உடலை 'போராடு அல்லது ஓடிவிடு' என்று, நமது வேட்டையாடி இரைசேர்த்த முன்னோர்கள் நிலைக்குத் தள்ளிவிடுகிறது. இதனால் வரும் கோபத்தை அடக்குவது என்பது எளிதல்ல. இது ஒரு நாளில் சாதிக்கக்கூடியதுமல்ல. கோபத்தை நம் உடலும் மனமும் பழுதுபடாத முறையில் வெளிப்படுத்துவதே உகந்தது. கோபத்தை அடக்குவதும் மன அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். கோபம் நம் கண்களை மறைத்துவிடுவதால் நாம் பெரும் தவறுகள் இழைப்பதற்கும் தூண்டப்படலாம். மேலும், அது நம் இதயத்துடிப்பை அதிகரித்து, இரத்தத்தைக் கொதிப்படைய வைத்து, ஜீரண சக்தியை இழக்க வைத்து, நரம்புகளைப் புடைக்க வைத்து உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடும். அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சி மூலம் அங்கே ஏற்பட்ட 15% மாரடைப்பும் 15% திடீர் இறப்புகளும் கோபத்தின் தூண்டுதலால் ஏற்பட்டவையே எனக் கண்டறிந்துள்ளனர். எனவே கோபத்தை ஒழுங்குபடுத்துதல் எவ்வளவு அவசியம் என்பது தெரிகிறதல்லவா?

எளிதாக, உடல் ரீதியில், உடனே கோபத்தை மாற்றக் கீழ்கண்ட முறைகளை அனுசரித்துப் பாருங்களேன்.

- சிறிதுநேரம் அந்த இடத்தை விட்டு அகன்றுவிடுவது
- சிறிது தூரம் வெளியில் பூங்காவில் காலாற நடப்பது
- ஏதாவது சிறிய உடல் பயிற்சிகள் செய்வது. இது நெற்றிப்பொட்டை அழுத்துதல், நீண்ட பெருமூச்சை 10 முறை உள்ளிழுத்து வெளிவிடுதல், கழுத்தை மேலும் கீழும் பக்கங்களிலும் மெதுவாக அசைத்தல் போன்றவையாகவும் இருக்கலாம்.
- சிறிது தனிமையை நாடுவது (பிடித்த இசையைக் கேட்கலாம்)
- குழந்தைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகளுடன் விளையாடுவது
- வயதிற்கேற்ப முதிர்ச்சி பெறுவது, கொஞ்சம் பொறுமை, பிறரை மதிப்பது, பிறரது சிரமங்களை அவர்கள் கோணத்திலிருந்து புரிந்துகொள்வது, விட்டுக்கொடுப்பது, உதவி புரிவது போன்றவற்றை எல்லா நாள்களிலும் பழகுவது உங்கள் கோபத்தை மாற்ற வல்ல அருமருந்துகளாகும். இவை உங்களது புலன் காட்சி மனப்பான்மை, அணுகுமுறை இவற்றை மாற்றிவிடும். உங்கள் கோபத்தை வெளிப்படுத்தும் முறைகளும் மாறிவிடும்.

நம் விவேகமுள்ள முன்னோர்கள் தெரியாமலா சொன்னார்கள், 'பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினார் காடாள்வார்' என்று. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்கிற அவப்பெயரை எடுக்க வேண்டாம். கோபம் உங்களை மட்டுமல்லாது உறவுகளையும் நட்புகளையும் பாதிக்கும்.

- உஷாலக்ஷ்மி சுதாகர் MAPDPC -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடைவதைவிட சாவதே மேல்

மசதா என்ற பாறைக்கோட்டையை உரோமானியப் படை தாக்க வந்தபோது அங்கிருந்த யூதர்கள் சரணடைவதை விட சாவதே மேல் என்று முடிவு செய்தனர். ஒருவரை ஒருவர் வெட்டிக் கொன்று கொண்டு 967 யூதர்கள் மடிந்தனர். இது நடந்தது கி.பி 73ல்

உரோமானியப் படை அங்கு வந்தபோது பிணக் குவியலைத்தான் கண்டனர். இரண்டு பெண்களும் ஐந்து குழந்தைகளும் மட்டுமே நடந்ததைச் சொல்ல உயிரோடிருந்தனர். இந்த விபரங்களை ஒரு புத்தகத்தில் எழுதியிருந்தவர் ஒரு யூதர் என்பதால் எல்லோரும் அதை உண்மையென ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

1963ல் இஸ்ரேல் நாட்டின் தொல்பொருள் ஆய்வாளர்கள் இதை ஆராய முற்பட்டனர். உலகெங்குமிருந்து ஐயாயிரம் தொண்டர்கள் பணியில் உதவினர். சாக்கடல் அருகில் யூதேயா சமவெளியில் மசதா குன்று கண்டுபிடிக்கப்பட்டது.

கிறீஸ்து பிறப்பதற்கு முன்பு யூதர்களின் அரசனாக இருந்த ஹெரால்ட் கட்டிய கோட்டை அது. ஓர் அறையில் மறைவாகப் புதைக்கப் பட்டிருந்த 14 சுருள்கள் கிடந்தன. அவை எல்லாமே விவலியப் பிரதிகள். கி.பி. 73க்கு முன் எழுதப்பட்டவை. மசதா இன்று இஸ்ரேல் நாட்டு மக்களால் புனிதமான இடமாகப் போற்றப்படுகிறது.

# பொறுமையின் வலிமை

காத்திருக்க முடியுமானால் தேவையானது கிடைக்கலாமென்று சொல்வார்கள். சரித்திரம் முழுவதும் இந்தப் படிப்பினை நிரம்பிக் கிடக்கின்றது. அமைதியான, நிச்சயமான பொறுமையின் வலிமை வலியுறுத்தப்படுகிறது. வரலாற்றுப் படிப்பினையை உணராதவர்கள் தவறு செய்ய வாய்ப்பு இருக்கிறது. அவர்களுக்காகப் பொறுமையைப் பற்றி மீண்டும் சொல்வோம்.

'காத்துக்கொண்டிருக்கும்போதே வேலை செய்துகொண்டிரு' என்கிறார் அமெரிக்க எழுத்தாளர் ஏ.சி. ஆலந் என்பவர். 'எப்படிக் காத்துக்கொண்டிருப்பது என்பதே வெற்றியின் இரகசியம்' என்கிறார் பிரெஞ்சு எழுத்தாளர் ஒருவர். 'வேலையைக் கடுமையாகக் கூடச் செய்யவேண்டும் என்பது இல்லை, சாதாரணப் பொறுமை காட்டினால் போதுமானது' என்கிறார் யுகுரு ஹோரஸ் புஸ்னெஸ். இரணங்கள் குணமாகப் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். பொறுமையாக இருப்பவன் தொடர்ந்து முயற்சி செய்வான். திறமை மட்டும் போதாது, விடாமுயர்சியும் தேவை. படிப்பும் அறிவும் போதுமானதல்ல. இந்த உலகில் படித்தவர்கள் குறைவா என்ன? பொறுமையும் விடாமுயற்சியும் மட்டுமே சக்தி வாய்ந்தவை. எதை அடையவேண்டும் என்று நினைக்கிறோமோ அதுவே கிடைத்தது போலத்தான். தீர்மானத்தோடு பொறுமையும் விடாமுயற்சியும் பலனை அதிகரிக்கின்றன.

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்று புரிந்துகொள்ளுங்கள். பொறுமையே ஞானம். அவசரப்படாமல் பொறுமையாக முன்னேறுகிறவனுக்கு எதுவும் தொலைவில் இல்லை. எந்தப் பெருமையும் அருகிலேயே இருக்கிறது. ஆனால் பொறுமையோடு கூட விடாமுயற்சியும் தேவை.

- குணா -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
31- 05 - 2008




# விவிலியம் கற்போம் - 65

(எண்ணிக்கை 4:1–20)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடமும் ஆரோனிடமும் கூறியது; லேவியின் புதல்வர்களிலிருந்து கோகாத்தின் புதல்வரை அவர்கள் மூதாதையர், வீடுகள், குடும்பங்கள் வாரியாகக் கணக்கெடு. ............................. வேலையின் திருப்பணிக்கு வரும் முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரையுள்ள அனைவரையும் கணக்கெடு. சந்திப்புக் கூடாரத்தில் ......................... புதல்வரின் மிகப் புனிதமான பணி இதுவே. பாளையத்தினர் புறப்பட்டுச் செல்லும்போது ஆரோனும் அவன் புதல்வரும் உள்ளே சென்று மூடுதிரையை இறக்கி ......................... பேழையை மூடுவர். வெள்ளாட்டுத்தோலால் அதனை மூடி கருநீலமான ஒரு துணியை அதன்மேல் விரித்து நிலைக்கால்களில் வைப்பர். திருமுன் அப்பத்து மேசையின்மேல் அவர்கள் ஒரு ..................................... விரிப்பர். அதன்மேல் தட்டுகள், பூக்கரண்டிகள், கிண்ணங்கள் ஆகியவற்றை வைப்பர். அப்பம் அதன்மேல் எப்போதும் இருக்கும். பின் அவற்றின்மேல் ......................... துணியை விரித்து அவற்றை வெள்ளாட்டுத்தோலால் மூடி, நிலைக்கால்களில் வைப்பர். நீலத்துணியை எடுத்து, விளக்குத்தண்டு, விளக்குகள், திரிகள், சாம்பல் தட்டுகள் ஆகியவற்றின் மேலும், எண்ணெய்க்காகப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் அனைத்தின்மேலும் விரிப்பர். அவர்கள் அதனை அதன் ................................ ஒரு வெள்ளாட்டுத் தோலால் மூடி அதனைச் சுமக்கும் சட்டத்தின்மேல் வைப்பர். பொற்பீடத்தின்மேல் ஒரு நீலத் துணியை விரித்து வெள்ளாட்டுத்தோலால் அதனை மூடி நிலைக்கால்களில் வைப்பர். ..................................... பணியில் பயன்படுத்தப்படும் அனைத்துப் பாத்திரங்களையும் அவர்கள் எடுத்து, அவற்றை ஒரு நீலத்துணியில் வைத்து வெள்ளாட்டுத்தோலால் அவற்றை மூடிச் சுமக்கும் சட்டத்தின்மேல் வைப்பர். பலிபீடச் சாம்பலை வெளியே எடுத்து அதன்மேல்............................. துணியை விரிப்பர். ஆரோனும் அவன் புதல்வரும் திரு உறைவிடத்தையும் திரு உறைவிடத்துப் பணிக்கலன்கள் அனைத்தையும் மூடியதும் பாளையத்தினர் புறப்பட்டுச் செல்வர். கோகாத்தின் புதல்வர் தூக்கிச் செல்ல வருவர். ஆனால் .................................. தூய பொருட்களை அவர்கள் தொடக்கூடாது. லேவியருள் கோகாத்து மரபைச் சார்ந்த குடும்பங்கள் அழிந்து படாதிருக்கட்டும். எனவே, புனிதமிகு பொருட்களை அவர்கள் நெருங்கி வருகையில் சாகாமல் உயிரோடிருக்கச் செய்யவேண்டியது ஆரோனும் அவன் ..................................... உள்ளே சென்று ஒவ்வொருவனும் செய்யவேண்டியது பற்றியும் தூக்கிச் செல்லவேண்டியது பற்றியும் பணிப்பர். ஆயினும் புனிதப் பொருட்கள் மூடப்படும்போது கோகாத்தியர் உள்ளே சென்று பார்க்கக்கூடாது. மீறினால் அவர்கள் சாவுக்குள்ளாவர்.

**விடைகள் : சாகாதபடிக்கு, தூயக, புதல்வரும், துணைக்கலன்களோடு, சந்திப்புக்கூடார, ஊதா, கோகாத்து, நீலத்துணியை, உடன்படிக்கை, கருஞ்சிவப்பு.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 65

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. இரண்டாம் உலகப்போர் என்ற நூலை எழுதி இலக்கியத்திற்கான நோபல் பரிசை வாங்கியவர்
(வின்சன்ற் சேர்ச்சில், சார்ள்ஸ் டிக்கன்ஸ், மார்க் டிவெய்ன்)

2. மருத்துவரீதியில் மையோபியா (MYOPIA) என்று அழைக்கப்படும் குறைபாடு
(கிட்டப்பார்வை, தூரப்பார்வை, கண்தெரியாமை)

3. தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டியவர்
(பாண்டியர், சோழர், சாளுக்கியர்)

4. உலகின் முதலாவது பெண் பிரதமர்
(பெனாசிர் பூட்டோ, இந்திரா காந்தி, சிறிமாவோ பண்டாரநாயக்க)

5. சனி கிரகத்தைச் சுற்றிவரும் நிலவுகளின் எண்ணிக்கை
(30, 35, 40)

6. 'நகர் வென்றது' என்னும் வாக்கியம்
(முதலாகு பெயர், இடவாகு பெயர், உவமையாகு பெயர்)

பெயர் : ........................................................................................

முகவரி : ........................................................................................

........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 65
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 63 விடைகள்

பாளையம், நக்சோன், சூவாரின், முதலாவதாக, ரூபன், 59300, மேற்கே, தான், லேவியர், குடும்பங்கள்

## அறிவை வளர்ப்போம் - 63 விடைகள்

1) 950 மைல்கள் 2) கரப்பான் 3) ஏகலைவன் 4) துளசிதாசர்
5) முடவனுக்குக் கோபம் 6) 2ம் வேற்றுமைத் தொகை

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் எவரும் இல்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி**
**ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- S. ஸ்டெனி றொனேஸ்
  c/o A. சகாயம்
  ப/ஸ்பிறிங்வெளி த.வி
  ஸ்பிறிங்வெளி, பதுளை
- கலைவாணன் லக்ஷாயினி
  மாரியம்மன் கோயில் வீதி
  பாண்டிருப்பு - 02

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 15 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  கிரேம்ராஜ் தினேசா
  சின்ன முகத்துவாரம்
  அக்கரைப்பற்று - 09
- **இரண்டாம் பரிசு** - 200/=
  செல்வி டினுஷா
  -குருச்சந்திரன்
  57, பாத்திமா வீதி
  திருகோணமலை
- **3ம் பரிசு** - 100/=
  S. அஜத்காந்
  21, அம்மன்
  கோயில் வீதி
  கல்லடி
  மட்டக்களப்பு

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்.....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## மே - 2008

**கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.50 மணி**

| | | |
|---|---|---|
| **நாள்:** | 10, 11, 12, 13 | - திருமதி ஜெயரஞ்சி வாஸ் |
| | 14, 15, 16 | - திரு. J. டேவிட் |
| | 24, 25, 26, 27 | - அருள்தந்தை டக்ளஸ் ஜேம்ஸ் |
| | 25, 26, 27 | - அருள்தந்தை இக்னேஸ் ஜோசப் |

**சிறுவர் உலகம் - மாலை 6.30 மணி**

**நாள்:-** 06, 20

கதையும் கருத்தும், விவிலியப் போட்டி, கவிதை,
குறுங்கதை, கட்டுரை, பாடல்கள் இன்னும்...

**புதிய உலகம் - மாலை 6.30 மணி**

**நாள்:-** 04, 18

வழிபாடு, திருச்சபைச் செய்திகள், பாடலும் பரிசும் (போட்டி)
நாடகம், சிந்தனை உரை, பாடல்கள் இன்னும்...

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org